தமிழ் வாழ்க !

துணர் ௩௫. மலர் ௪.

தமிழ்ப் பொழில்

விகாரி - ஆடி

1959

கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

தொண்டு தமிழ் முன்னேற்றம்

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

பொழிற்றொண்டர் :

ச. சுயம்பிரகாசம், B. A., B. L.,

CONNEMARA PUBLIC LIBRARY
4 - AUG 1959
MADRAS

தமிழ்ப் பொழில்.

பதிப்பாசிரியர் குழு.

1. திரு. ச. சுயம்பிரகாசம், B. A., B. L., தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்; பொழிற்றொண்டர்.
2. திரு. நீ. கந்தசாமி பிள்ளை, பள்ளியகரம், தஞ்சாவூர்.
3. பேராசிரியர் தி. வை. சதாசிவ பண்டாரத்தார், ஆராய்ச்சித்துறை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.
4. சித்தாந்த கலாநிதி ஔவை. சு. துரைசாமி பிள்ளை, பேராசிரியர், தியாகராயர் கல்லூரி, மதுரை
5. வித்துவான், க. வெள்ளைவாரணனர், ஆராய்ச்சித்துறை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.
6. திரு. சி. வேதாசலம், B. A., B. L., அமைச்சர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்.
7. திரு. வித்துவான் ச. பாலசுந்தரம், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சை.

உள்ளுறை

துணர் கூ — மலர் ச

		பக்கம்
1.	நாவலர் ச. சோமசுந்தர பாரதியார் அவர்கள் எண்பதாம் ஆண்டு நிறைவு வாழ்த்து	97
2.	மதிப்புரை	100
3.	கையறவு	102
4.	இலியத் — விரிஞ்சை மு. பழநி, எம். ஏ.	103
5.	சிற்றிலக்கியம்: 1. காதல் — மது. ச. விமலானந்தம், எம். ஏ.,	105
6.	தமிழில் தாவரம்: கொன்றை — கு. சீநிவாசன், M. Sc.,	114
7.	தமிழ்நாட்டுப் பெண்களின் பண்பாடு — சாமி. சிதம்பரனர்	118
8.	ஒரு தொடர்புரை — மயிலை. சீனி. வேங்கடசாமி	128

வாழ்த்துகிறோம்.



நாவலர், கணக்காயர், டாக்டர்,
ச. சோமசுந்தர பாரதியார் அவர்கள்
எம். ஏ., பி. எல்., லிட். டி.

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

AUG 1959 MADRAS

துணர்	திருவள்ளுவர் யாண்டு ௲௯௱௯	மலர்
௩௫	விகாரி, ஆடி 1959 ஜூலை, ஆகஸ்டு.	௪

தமிழ்ப் பேராசிரியர் நாவலர், கணக்காயர், டாக்டர்

ச. சோமசுந்தர பாரதியார் அவர்கள், எம். ஏ., பி. எல்., டி. லிட்.

எண்பதாம் ஆண்டு நிறைவு வாழ்த்து.

தமிழ் மொழியின் ஆக்கங்கருதித் தம் மதிநலத்தாற் பெருந் தொண்டு புரிந்துவரும் செந்தமிழ்ப் பேராசிரியர்களுள் முதல் வரிசையில் வைத்தெண்ணத் தக்க சிறப்புடையார் நாவலர் கணக்காயர் டாக்டர். ச. சோமசுந்தர பாரதியாராவர். சிறந்த வழக்கறிஞராகவும் நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் ஒருங்கு வாய்க்கப் பெற்ற நல்ல தமிழ்ச் சான்றோராகவும் விளங்கும் நம் பாரதியார் எண்பதாண்டுகளுக்கு முன்னே (27—7—1879) தென்பாண்டி நாட்டில் திருநெல்வேலியிற் பிறந்தார்கள். முப்பதுநாட் குழவியாக எட்டயபுரம் சென்ற பாரதியார் எட்டாம் வகுப்புவரை அவ்வூரிலேயே கல்விபயின்றனர். பின்னர்த் திருநெல்வேலிக்கும் அடுத்துச் சென்னைக்கும் சென்று பி. ஏ., பட்டமும், பி. எல்., பட்டமும் பெற்றனர். தமிழ் முதன் மொழியாகவும் மலையாளம் துணைமொழியாகவும் கற்று எம். ஏ., பட்டத் தேர்விலும் வெற்றியுற்றனர்.

1905 ஆம் ஆண்டில் நம் பாரதியார் தூத்துக்குடி சென்று வழக்கறிஞராக அமர்ந்தனர். இதுபோது கப்பலோட்டிய வீரத் தமிழர் வ. உ. சிதம்பரனாருடன் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. 1920ஆம் ஆண்டில் மதுரை நகரிற் குடியேறி வழக்கறிஞர் தொழிலைத் தொடர்ந்து நடத்தலானார்.

வழக்கறிஞர் தொழிலில் திறமையுடன் பணிபுரிந்துவந்த பாரதியார் தக்க தமிழ்ப் பெரும் புலவர்களின் சார்புபெற்றுத் தமிழ் நூல்களின் சுவைநலங்களில் ஈடுபட்டார். தொல்காப்பியம், திருக்குறள், சங்கச் செய்யுட்கள், சிலப்பதிகாரம், கம்பராமாயணம் முதலிய பெருநூல்களைத் தாமே பயின்றார். அதன்பயனாகத் தமிழிலக்கிய அமைதியையும் செந்தமிழ்ப் புலவர்களின் புலமைத் திறத்தையும் நன்குணர்ந்து மகிழ்வது இவரது பொழுதுபோக்காக அமைந்தது. இருதரப் புலவர்களிடையே ஏற்பட்டதொரு வழக்கில்

பாரதியார் வழக்கறிஞராக வந்து வழக்குரைத்த நிலையில் அவரது தமிழ்க்கல்வியின் ஆழத்தினைத் தமிழ்ப் புலவர்கள் வியந்து பாராட்டினர்கள்.

தாம் பெற்ற ஆங்கிலமொழிக் கல்வியின் துணைகொண்டு தமிழ் நூல்களின் நுட்பங்களை விளக்குவதிலும், காய்தல் உவத்தல் அகற்றிச் செந்தமிழ்ப் பெருநூல்களை முறைப்பட ஆராய்வதிலும், எத்தகைய நூற்கருத்துக்களையும் எதிர்த்து நோக்கி அவற்றின் வன்மை மென்மைகளைத் துணிவதிலும், தம் உள்ளத்திற்கு உண்மையென்றுபட்ட கருத்துக்களை எவர்க்கும் அஞ்சாது எடுத்துரைப்பதிலும் நம் பாரதியாருக்குத் தனிச்சிறப்புண்டு என்பதனைத் தமிழகம் நன்குணரும்.

தொல்காப்பியம் தமிழ்நூல்களிற் பழமையானது. தமிழ்மொழியில் வழங்கும் எழுத்திற்கும் சொல்லிற்கும் இயல் வகுப்பது. தமிழர்க்கே உரிய அகம், புறம் பற்றிய வாழ்வுக்கூறுகளை விளக்கி நிற்பது. இடை, கடைச் சங்க நூல்கட்கும் இலக்கணமாக மிளிர்வது. தன்னினின்றும் பல இலக்கண நூல்கள் காலந்தோறும் தோன்ற இடந்தந்து அழியாக் கருவாக அமைந்தது. இளம்பூரணர், சேனுவரையர், பேராசிரியர், நச்சினர்க்கினியர், கல்லாடர், தெய்வச்சிலையார் போன்ற அறிஞர் பெருமக்களைத் தன் கருத்தை விளக்க வைத்தத் தகுதிப்பாடுடையது. தொல்காப்பியத்தின் பொருட்பகுதி தமிழர் பண்பாட்டை உள்ளபடி உலகுக்கு உரைப்பது. ஆயினும் இந்நூற்கு ஏற்பட்ட பழையவுரைகளின் பலவிடங்களில் நூலாசிரியர் கருத்திற்கும் தமிழர் வாழ்வியலுக்கும் மாருக உரை வகுத்திருப்பதைக் கண்ட பாரதியார் மனம் புழுங்கினர். இவ்வுரைகளிற் காணும் குறைகளை எடுத்து விளக்கினர்.

திருவள்ளுவரைப்பற்றி யார்யாரோ கட்டிவிட்ட கதைகளைத் தமிழறிஞர் உண்மையென நம்பிவந்தது கண்டு சினந்து திருக்குறளாசிரியர் வரலாறு பற்றிய செய்திகளை நுணுகியாராய்ந்து அவ்வாசிரியரது புலைக்குடிப்பிறப்பு, மயிலை வாழ்வு, ஏலேலசிங்கர் தொடர்பு, கூடற்சங்கவென்றி, ஆரிய முதனூல்பற்றி அறம் பாடியது ஆய பொய்படு செய்திகளை மறுத்து அறிவுச்சுடர் கொளுத்திய பெருமை நம் பாரதியாரைச் சார்வதாகும்.

இராமாயணக்கதை தமிழ்நாட்டில் மட்டுமன்றி இந்தியப் பெருநிலம் யாங்கணும் விளங்கும் சிறப்புடையதாகும். நம் தமிழ்மொழியிற் கம்பர் பாடிய இராமாயணம் செய்யுட் சிறப்பாலும் சொல்வளத்தாலும் பெருமை எய்தியது. தசரத மன்னன் நல்லவனென்றும், கைகேயி கொடுமை யுடையவளென்றும், அறிஞரும் ஏனைய மக்களும் எண்ணி வருவதை நாம் அறிவோம். கல்வியிற்

பெரியராய கம்பரும் கைகேயியைக் குறிப்பிடும்போது "படரெல்லாம் படைத்தாளை" என்றும் "பழிவளர்க்குஞ் செவிலியை" என்றும் குறிப்பிடுகிருர். இக்கருத்தினை நன்கு எண்ணி ஆய்ந்த நம் பாரதியார் தசரதன் குறையுடையானென்றும், கைகேயி நிறையுடையாளென்றும் தக்க சான்றுகள்காட்டி நம் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் ஓர் விழாவின்போது உரையாற்றினுர்கள்.

தமிழ்ச் சொற்களின் ஆராய்ச்சியில் நம் பாரதியார் மிக்க ஊக்கம் காட்டினர். "எல்லாச் சொல்லும் பொருள் குறித்தன" வென்னும் தொல்காப்பிய நூற்பாவின் பொருள் தமிழ்ச் சொற்களில் அமைந்துள்ள படியைப் பல சொற்களிற் கண்டு மகிழ்ந்து பிறர்க்கும் விளங்க விரிவுரைகள் ஆற்றினர். தமிழில் உண்மை, வாய்மை, பொய்மை என்ற சொற்களுக்கு வேறுபாடு தெரியாது குழம்பியதுண்டு. உண்மை உள்ளத்தையும், வாய்மை சொல்லையும், மெய்மை செயலையும் அடிப்படையாகக் கொண்டதென்றும் தமிழர் உள்ளத்தாற் பொய்யாதொழுகுதலை உண்மைஎனவும், சொல்லாற் பொய்யாதொழுகுதலை வாய்மையெனவும், செயலாற் பொய்யாதொழுகுதலை மெய்மையெனவும் கொண்டனர் என்று தெளிவாக விளக்கினுர் நம் பாரதியார்.

திருவாளர் பாரதியாரவர்கள் நம் கரந்தைத் தமிழ்ச் சங்கத்துக்கு மிகவும் உரியவர்கள். நம் சங்கத்தின் தொடக்கமுதல் விழாத் தலைமை பூண்டும், அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்தியும் "தமிழ்ப் பொழில்" என்னும் திங்கள் இதழுக்குக் கட்டுரைகள் வழங்கியும் பேருதவி புரிந்தவர்கள். மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் உறுப்பினராகவும், மதிப்பியற் செயலாளராகவும் "செந்தமிழ்" என்னும் திங்களிதழ்க்குக் கட்டுரை வழங்கியும் தொடர்ந்து பணியாற்றியுள்ளார்கள். இவர்களது புலமைத் திறத்தை நன்குணர்ந்த செட்டிநாட்டரசர் வீரத்திரு. அண்ணுமலை செட்டியார் அவர்கள் இவர்களை அண்ணுமலைப் பல்கலைக் கழகக் தமிழ்த் துறைத் தலைவராக விரும்பி அழைத்தார்கள். பாரதியாரும் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராக ஐந்தாண்டுகள் யாவரும் பாராட்டு முறையில் தொண்டாற்றினுர்கள்.

இவர்களால் இயற்றப்பெற்ற ஆராய்ச்சி நூல்கள் : திருவள்ளுவர்—சேரர் பேரூர்—சேரர் தாயமுறை—தசரதன் குறையும், கைகேயி நிறையும்—தொல்காப்பியப் பொருட்படலம், அகத்திணையியல், புறத்திணையியல், மெய்ப்பாட்டியல் என்பன. இவையேயன்றித் தம் பாவன்மையால் சுவைபெற இயற்றப்பட்ட செய்யுள் நூல்கள் மாரிவாயில்—மங்கலக் குறிச்சிப் பொங்கல் நிகழ்ச்சி—என்பனவாகும்.

மதிப்புரை.

1. உளநூலும் கல்வியும்.

ஆசிரியர்: த. இராமநாத பிள்ளை,
Principal, Puloly Boys College, Point Pedro, JAFFNA.

ஆசிரியரனைவர்க்கும் பயன்படக்கூடிய இவ்வருமையான நூல் 'தமிழிலிலாப் பிறமொழி நூலனைத்தும் நல்ல தமிழாக்கி வாசிக்கத் தருதல் வேண்டும்' என்ற புரட்சிக்கவிஞரின் கருத்துக்கொப்ப எழுதப்பட்டுள்ளது. பாடம் பயிற்றுவிக்கும் ஆசிரியன் பாடத்தை மட்டும் அறிந்திருந்தால் பயனில்லை. பாடம் பயிலும் மாணவர்களது மனப்பக்குவத்தை முதலில் நன்கு அறியவேண்டும் அதற்குத் துணைபுரிய முன்வருகிறது இந்நூல்.

பொதுவான உளநூல் உண்மைகள், கல்விப் பயிற்சியோடு தொடர்புடைய உளநூற் கருத்துக்கள், பல்வேறு கல்விமுறைகள், கல்வியின் நோக்கங்கள் ஆகியவற்றை ஆசிரியர் அழகாக விளக்கிச் செல்கிருர். நூல் முழுவதும் மேனுட்டு ஆசிரியர்கள் பலரது கொள்கைகளும் கோட்பாடுகளும் நிரம்பக் காணப்படுகின்றன. அவற்றின் இடையே தமிழாசிரியன்மாருடைய விழுமிய கருத்துக்களும் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றன. மெக்டுகலைக் காணும் கண்கள் அடுத்தாற்போலேயே மெய்கண்டதேவரையும் காணத் தவறவில்லை.

99-ஆம் பக்கத் தொடர்ச்சி.

1938-ஆம் ஆண்டில் சென்னை அமைச்சரவையினர் தமிழ் நாட்டில் உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு இந்தி மொழியைக் கட்டாய பாடமாக வைத்தபோது, இந்தித் திணிப்பு தமிழ்மொழி வளர்ச்சிக்கு கேடு தருமென பாரதியார் எதிர்த்துப் போராடினர்.

நம் பாரதியார் யாழ்ப்பாணத் தமிழரால் "நாவலர்" என்ற பட்டமும் மதுரைத் திருவள்ளுவர் கழகத்தாரால் "கணக்காயர்" என்ற பட்டமும் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தாரால் "டாக்டர்" என்ற பட்டமும் வழங்கப்பெற்றனர். ஒருவர் உயர்வு அவர்தம் ஓய்வை எவ்வாறு பயன்படுத்துகிருர் என்பதைப் பொறுத்ததேயாகும். நம் பாரதியார் பல பட்டங்களையும் பாராட்டுரைகளையும் பெறக் காரணம் அவரது ஓயாத உழைப்பேயாகும். அவர் ஓய்வு நேரங்களில் விருப்பத்தோடு பயின்றது தமிழே. இத்தமிழ்த் தொண்டே அவரது மேன்மைக்கு வழி வகுத்ததெனலாம்.

ஆயிரம் பிறை கண்டு மகிழும் செந்தமிழ்ச் சான்றோராகிய திருவாளர் நாவலர் கணக்காயர் டாக்டர் ச. சோமசுந்தர பாரதியாரவர்கள் தமிழ்மக்கள் உளம் மகிழச், சுற்றமும் நட்பும் சூழ்ந்து போற்றத், தமது நூற்றுண்டு விழாவுங்கண்டு நீடு வாழ்கவென நம் கரந்தைத் தமிழ்ச் சங்கம் உளமுவந்து வாழ்த்துகின்றது.

பொழிற்ருெண்டர்.

சித்திபெறுவதற்கு நம்பிக்கை இன்றியமையாதது என்பதை விளக்கும்போது ஆங்கிலேயர் புதிய கப்பலை நீரில் இறக்கும்போது "உவையின்" குப்பி ஒன்றை உடைத்துத் தெளிப்பது வழக்கம் என்பதை யடுத்தே நெற்சூடு விளக்கும்போது பொலி! பொலி!! என மங்கலச் சொற்களைச் சொல்வது தமிழர் வழக்கம் என்பதையும் காண்கின்றோம். இவையெல்லாம் ஆசிரியர் தான் தமிழர் என்பதை மறக்கவில்லை என்பதற்குத் தக்க சான்றுகளாக அமைந்துள்ளன.

இன்றைய தேவையை உணர்ந்து எழுதப்பட்டுள்ள இந்நூல் பயிற்சிபெறும் ஆசிரியர்க்கும் புலவர் (மாணவர்)க்கும் பெருந்துணை புரியும் என்று நம்பலாம்.

2. பெரும்பாணாற்றுப்படை ஆராய்ச்சியும் உரையும்.

இயற்றியவர் :

பாஷாகவிசேகரர் மகாவித்வான், **ரா. இராகவ அய்யங்கார்** அவர்கள்

அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடு.

நூற்றுப்பதினெட்டுப் பாக்களையுடையது.

பல்லவ மன்னர் தமிழ் நாட்டைப் பல நூற்றாண்டுகளாக ஆண்டு வந்திருந்தும், அவர் யார்? எங்கிருந்து வந்தனர் என்னும் செய்தி இதுவரை நிகழ்ந்த வரலாற்று ஆராய்ச்சியால் தெளிவுசெய்ய முடியவில்லை. ஐயங்கார் அவர்கள் தொண்டைமான் இளந்திரையன் பல்லவ மரபினன் என்று நாட்டப்பெரிதும் முயன்றுள்ளார்கள். அவர்கள் ஆராய்ச்சி போற்றுதற்குரியது. இருப்பினும் சில செய்திகள் ஆராய்தற்குரியன. "இருக்கு வேதத்தில் அர்ண என்பவன் ஓர் பழங்குடித் தலைவனாகக் கேட்கப்படுகிறான். அவ்வழியினன் அர்ணிகன் எனினும் அமையும். அணிகன் என்னும் பெயர் வழக்கு இக்குடியினரிடம் நெடுங்காலத்துக்குப் பின்னும் வழங்கியதென்பது செயங்கொண்டார்,

"மறித்தோடி யெவ்வரசுஞ் சரிய வென்று
வருமணிகப் பல்லவர்கோன்"

எனப்பாடுதலான் அறியலாகும்". (பெரும். ஆரா. பக்–17.)
என்று எழுதியுள்ளார். ஆனால் இப்பொழுதுள்ள பதிப்பில் 'வருமனுக்கைப் பல்லவர்கோன்" என்ற பாடமே உள்ளது. இவ்விரண்டு பாடங்களில் எது உண்மையான பாடம் என்று ஆராய்ந்து துணியவேண்டும். பொதுவாக, இச்சுவடி ஆராய்ச்சி அறிஞர் ஆராய்ந்து படிக்கவேண்டியதொன்றாகும்.

கையறவு.

கள்ளப்பிரம்பூர் **க. நல்லமுத்து நாட்டாரவர்கள்** 27-6-59ல் இறைவன் திருவடி எய்தியமையறிந்து வருந்துகின்றோம். திரு. நாட்டாரவர்கள், நம் சங்கத் தலைவர் தமிழவேளவர்களுடனும், அறிஞர் A. T. பன்னீர்செல்வமுடனும் நெருங்கிய தொடர்புகொண்டு தொண்டாற்றியவர். நம் சங்கம் தோன்றிய நாள்தொட்டு வாணாள் உறுப்பினராகவும் பின்னர் வினைக்குழு உறுப்பினராகவுமிருந்து பணியாற்றியவர். தஞ்சை வட்ட, மாவட்டக் கழகங்களிலும், மாவட்டக் கல்வி கழகத்திலும் உறுப்பினராகவிருந்து தன்னலமின்றிப் பிறநலங் கருதி உழைத்தவர். வாணாளிற் பெரும்பகுதியைப் பொதுவாழ்விற் குரிமைப்படுத்திய ஒரு நல்ல தொண்டரைத் தஞ்சை மாவட்ட மிழந்த தென்று கூறலாம். அறிஞர், அறியாதோர், பெரியவர், சிறியவர், என்ற பல்வேறு நிலையினரான மக்கள் யாவருடனும் பண்புற இனிமையாக உரையாடி மகிழும் சால்புடையவர். இத்தகு பண்பினரை இழந்தமைக்கு வருந்துவதோடு, அவருடைய குடும்பத்தாருக்கு நம் சங்கத்தின் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

பொழிற்றொண்டர்.

நமது சங்க உறுப்பினர் திரு. **க. அண்ணாமலைப் பிள்ளையவர்கள்** 3—7—59 வெள்ளிக்கிழமைத் திடுமென இயற்கை யெய்தியமை கேட்டுப் பெரிதும் வருந்துகின்றோம். அவர் சங்கத் தொடர்பான செயல்களில் ஆர்வமும் பற்றும் உடையவர். பழகுதற்கினிய பண்பினர். அவர் இழப்புக் குறித்து வருந்துவதோடு, அன்னார் குடும்பத்தாருக்கும் நம் சங்கத்தின் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

பொழிற்றொண்டர்.

சென்ற இதழ் 79-ஆம் பக்கத் தொடர்ச்சி.

இலியத் (ILIAD)

சுருக்கம்–எழுதியது

விரிஞ்சை, மு. பழநி, எம்.ஏ.

இலியத்திற்குத் தொடர்புள்ள பிந்திய கதை :—

எக்தர் போன்ற பெருவீரர் எல்லாம் இறந்துவிட்டனர். இப்பொழுதாவது எலனைத் திருப்பிக்கொடுத்துவிட்டு நம் நாட்டை மீட்டுக்கொள்ளலாம்; மாவீரன் அகிலெசு திராயைத் தீக்கிரையாக்குவான் போலிருக்கிறது என்று பேருள்ளம் படைத்த பல திராய் அறிவுடையோர் சொல்லினர். ஆனால் பாரிசுதான் விடாப்பிடியாக நின்றான். பிரியமிற்கு உதவிபுரிவதாக வாக்களித்த எதோப்பிய மன்னன் மெம்னன் [41] ஒரு பெரும் படையோடு வந்துசேர்ந்தான். போர் மறுபடியும் தொடங்கிற்று. அகிலெசு எதோப்பிய மன்னனையும் விண்ணுலகிற்கு அனுப்பிவிட்டு வீரமுரசு கொட்டினான். திராய் மதிலை நோக்கி விரைந்து நடந்தான். எங்கிருந்தோ இதனைப் பார்த்துக்கொண்டிருந்த பாரிசு திடீரென்று அகிலெசின்மேல் ஓர் அம்பினை எய்தான். விதியை யார் வெல்லவல்லார்? அவ்வம்பு சீறிக்கொண்டு வேகமாய்ச் சென்று அகிலெசின் வலக் கணுக்காலிற் பட்டுத் துளைத்தது. அந்த ஓர் இடம் அவனுடைய உயிரைப் போக்குமிடமல்லவா? ஞாயிறு நிலைதளர்ந்து கீழே வீழ்ந்ததுபோல் வீராதிவீரன் அகிலெசு மண்மகள்மீது வீழ்ந்து ஆவி துறந்தான். அசெக்சும் ஒதிசிசும் அகிலெசின் பிணத்தைக் காப்பாற்றித் தம் பாசறைக்குக் கொண்டுசென்று எரியூட்டினர். இறுதியில் ஒருபிடி சாம்பலானான்.

எதீனா எனும் தேவதைச் சிலை திராய் நகர நடுவில் உள்ள கோயிலில் இருக்கும்வரை அந்நகரை யாராலும் முற்றுகையிட்டுக் கைப்பற்ற முடியாது எனும் ஒரு தெய்வ நியதி இருப்பதைக்கேட்டு ஒதிசிசு பலவாறு சிந்தித்து இரவலன் வேடம் பூண்டு திராய் நகருக்குள் செல்ல நினைத்தான். தையோமிதெசுவையும் துணைக்கு அழைத்துக்கொண்டான். ஆனால் வெளியிலேயே நின்றுவிட்டான் தையோமிதெசு. திறமையாக உள்ளே நுழைந்து தெருவெல்லாம் சுற்றித்திரிந்தான் ஒதிசிசு. கடைசியில் எலனைக்கண்டு அவளுடைய உதவியால் வழியைக் கண்டுகொண்டான். அதற்குள் தையோமிதெசும் வந்துசேர்ந்தான். இருவரும் காவலர்களைக்கொன்று சிலையைக் கவர்ந்துகொண்டு மிக்க திறமையாகக் கிரேக்கப் பாசறைக்கு

41. Memnon.

வந்துசேர்ந்தனர். பலமுறை தாக்கியும் திராயைக் கைப்பற்ற முடியவில்லை. திராயைச் சூழ்ச்சியால்தான் வெல்லுதல் வேண்டும் என்று கால்கசு சொன்னான். உடனே ஒதிசிசு ஒரு சிறந்த சூழ்ச்சியை நினைத்துச் சொன்னான். அச்சூழ்ச்சியைத் திறம்பட செயற்படுத்தினர்.

திராய் மதில் வாயிலில் நுழைய முடியாத அளவிற்கு பேருருவம் படைத்த ஒரு மரக்குதிரையைச்[42] செய்தனர். திராய் வீரருக்கு அறிமுகமில்லாத சினன்[43] எனும் அடிமையின் கைகளைக் கயிற்றினால் கட்டி ஆண்டு நிறுத்தினர். முகத்தில் குருதியையும் பூசினர். ஒதிசிசு, மெனிலசு போன்ற நூற்றுக்கணக்கான வீரர் படைக்கலங்களோடு குதிரையின் வயிற்றில் புகுந்து கொண்டனர். எஞ்சிய பல வீரர் பாசறைகளைக் கொளுத்திவிட்டுக் கப்பலிற் சிறிது தொலைவு சென்று ஒளித்துக்கொண்டனர். பாசறைகள் எரிந்திருப்பதையும் கிரேக்க வீரர் கப்பலிற் செல்வதையும் கண்ணாரக்கண்டனர் திராய் வீரர். சினனைக் கேட்டனர். "சிலையைக் களவாடியதால் எதினாவிற்கு வெகுளி ஏற்பட்டிருக்கும் என்று அஞ்சி, அவ்வெகுளியைத் தணிப்பதற்காக இம்மாபெரும் மரக்குதிரையைக் கோயிலிற்குப் படையலாகவைத்துக்கப்பலேறித் தம் நாட்டிற்குத் திரும்பிவிட்டனர்; நான் பலியிடப்படுவதற்காகக் கட்டப்பட்டேன்; ஆனால் இறைவன் அருளால் தப்பினேன்" என்று வஞ்சகச் சொற்களை இனிய முறையில் சொன்னான் சினன் எனும் அடிமை. திராய் வீரர் உண்மையென்று உறுதியாக நம்பினர். வாயிலில் நுழையாதாகவே மதில் இடிக்கப்பட்டு நகருக்குள்ளே குதிரை இழுத்துச் செல்லப்பட்டது. கொண்டு சென்று கோயிலில் நிறுத்தினர். பத்தாண்டுக்காலம் நடந்த போர் ஒய்ந்தது, கிரேக்கர் நாடு திரும்பிவிட்டனர் என்று மகிழ்ச்சியால் இரவெல்லாம் மதுவருந்தி ஆடிப்பாடி அயர்ந்து அச்சமில்லாமல் உறங்கினர். நள்ளிரவானதும் அடிமை சினன் பதுங்கிப்பதுங்கித் தெருவழியாகச் சென்று மதில்மேல் ஏறினான். தீப்பந்தம் கொளுத்தி இதுதான் தக்கசமயம் என்று கப்பலிலே சென்ற கிரேக்க வீரருக்குச் சைகை காட்டினான். உடனே குதிரையிடம் சென்று எல்லோரும் அயர்ந்து உறங்கிக்கொண்டிருக்கின்றனர் என்று மெல்லச் சொன்னான். இதைக்கேட்டுக் குதிரையிலிருந்து வீரர் வெளியே குதித்து நகரைச் சூறையாடினர், வீடுகளுக்கெல்லாம் தீ வைத்தனர். அதற்குள்ளாகக் கப்பலில் வந்த வீரரும் இடிபட்ட மதிலின் வழியாக வந்துசேர்ந்தனர். திராய் மக்களைக் கொன்று குவித்தனர். பேயாட்டமாடித் திராய் நகரை எரித்தனர். பாரிசும் அழிந்துபட்டான். மெனிலசு எலனைத் தேடிக்கொண்டு ஓடினான். கண்டு பிடித்து விட்டான். வெட்டிவிடலாம், இவளால்தான் இத்தனை அழிவும் என்று ஆத்திரத்தோடு வாளை ஓங்கினான். ஆனால் திராய் நகரம் பரந்து எரியும் தீயின் ஒளியில் அவளழகு மிகுந்து அன்

42. Colossal Wooden Horte. 43. Sinon.

சென்ற இதழின் தொடர்ச்சி.

சிற்றிலக்கியம்: 1.

காதல்

மது. ச. விமலானந்தம், எம்.ஏ.,
சரபோசி அரசர் கல்லூரி, தஞ்சாவூர்.

காதல் இலக்கியங்கள் தோன்றிய காலத்தை இன்னதென்று அறுதியிட்டு உறுதி கூறுதற்குச் சான்றேதுமில்லை. எனினும் இலக்கிய வரலாற்றை ஆராயுங்காலத்து 17, 18-ம் நூற்றுண்டுகளிலே இவ்வகை இலக்கியங்களை இயற்றுவதிலே புலவர் பெருமக்கள் நாட்டம் செலுத்தினர் எனக் கூறலாம்.

காதல் இலக்கியங்களிற் காலத்தால் பழமையானது 'கூளப்ப நாயக்கன் காதலே'. 17-ம் நூற்றுண்டின் பிற்பகுதியிலே எழுந்ததாகும். இதனை யாத்தவர் 'சுப்பிரதீபக் கவிராயர்' மதுரை மாவட்டத்துத் திருமங்கலம் என்ற ஊரினர். இவர் பரஞ்சோதி முனிவரின் மாணுக்கர் என்பர்.

கோமுனிவர் கொண்டாடும் கூடற் பரஞ்சோதி
மாமுனிவர் செம்பொன் மலர்ப்பாதம் நான்மறவேன்.

104-ஆம் பக்கத் தொடர்ச்சி.

றலர்ந்த செந்தாமரை போலிருந்ததைக் கண்டு அவளைக் கொல்லாது அணைத்துக்கொண்டு எஞ்சிய வீரரோடு நாடு திரும்பினுன்.

முடிவுரை:—

இலியதிற்கு முந்திய நிகழ்ச்சிகளை யெல்லாம் "கைப்பிரியா"[44] எனும் காப்பியத்திலும், பிந்திய நிகழ்ச்சிகளைச் "சிறிய இலியதிலும்"[45] வர்சில்[46] எனும் உரோமாபுரிக் கவிஞன் எழுதிய ஈனித்[47] எனும் உள்ளுதொறும் உள்ளம் உருக்கும் காப்பியத்திலும் காணலாம்.

இலியதில் கடவுளரும் பங்கு கொள்ளும் தன்மையையும், ஒரு பெண்ணிற்காக திராய் நகரமும், அகிலெசு போன்ற வீராதி வீரரும் அழிந்து பட்டதையும் காணுகின்றேம். இக்காப்பியக் கதைப் போக்கையும், இராமாயணக் கதைப் போக்கையும் எண்ணுந்தொறும் வியப்பு மேலிடுகிறது. இரண்டு கதைகளும் பழங்காலத்தவை; சமகாலத்தவை. இலியதில் காதலும் வீரமும் களிநடம் புரிவதைக் காணுகின்றேம். வீரச்சுவையை நனி சொட்டச் சொட்டப் பாடும் கவிவலவன் ஓமர் எனின் பிழையாமோ?

---

44. Cypria. 45. Little Iliad. 46. Virgil. 47. Aeneid.

என்ற அடிகளைச் சான்ருகக் காட்டுவர். பாட்டுடைத் தலைவன் கூளப்பநாயக்கன். மதுரை மாவட்டத்து நிலக்கோட்டையை ஆட்சி செய்தவன். இதனைக் கவிராயரே,

கற்கோட்டை என்றவர்மேற் கண்சிவந்து கண்டவர்செம்
பொற்கோட்டை யென்னப் புகழும்நிலைக் கோட்டையினன்.

என்று பாடுகின்ருர். இந்நூலினுள் இவன் நாகம கூளப்பன், பெரிய நாகேந்திரன், பெரிய நாயகன் என்ற பெயர்களிலே அழைக்கப் பெறுகின்ருன். இவனைத் திருமலை நாயக்கனின் மைத்துனன் என்பர்.

காதற் பிரபந்தங்களிலே முதன்மையும் தொன்மையும், எளியதும் இனியதுமாயது கூளப்ப நாயக்கன் காதலே, இரண்டிரண்டு அடிகளையுடைய 374 கண்ணிகளைக் கொண்டிலங்கும் இதனைத் தழுவியே ஏனைய புலவர்களும் காதலிலக்கியங்கள் செய்தனரென்ருல் இதன் அருமையையும் பெருமையையும் என்னென்பது? காதலிலக்கியத்தின் கதையமைப்பைக் காண்பதற்குக் கூளப்ப நாயக்கன்காதலே சிறந்த எடுத்துக்காட்டாகும். இனி கதையமைப்பைக் காண்போம்.

பாட்டுடைத் தலைவன் பரிவாரங்கள் புடைசூழ வேட்டைமேற் செல்கின்ருன். நிமித்தம் கூறுவான் நடுவழியிற்கண்டு, காவலனுக்கு முழுவேட்டை கிடைப்பதோடு, கன்னி வேட்டையும் கிட்டுமெனக் கூறுகின்ருன். காட்டைக் கலைத்து வேட்டையாடுகின்றனர். அகப்படாத விலங்கும் அகப்படுகின்றது; ஆனல் மான் ஒன்று மட்டும் தப்பியோடுகின்றது. மானைத் தொடர்ந்தான் மன்னன். மானைத் தொடர்ந்தான் என்றதும் இராமன் தொடர்ந்த மான் போன்ரு? என மருள வேண்டா! அம்மான் அறிவரிய பெம்மானை சிறையிருந்த செல்வியிடமிருந்து பிரித்தது; ஆனல் இம்மானே கோதையொருத்திபால் கூட்டுவிக்கின்றது.

மால்தொடர்ந்த மான்ஓர் மயிலைப் பிரித்தது,ஐயன்
கால்தொடர்ந்த மான்ஓர் கருங்குயிலைக் கூட்டியதே!

மானைக்கொன்று மலர்ச் சோலையிலே இளைப்பாறுகின்ருன் மன்னன். மலர் கொய்ய வந்து தன் தோழியரைப் பிரிந்த ஒரு பாவை நல்லாளும் அப்பொழிலை அடைகின்ருள். காவலனும் கண்டுவிடுகின்ருன்! மாதோ? மடமயிலோ? அன்றித் தேவமாதோ? என்று ஐயுற்ருன். எனினும் கண் இமைத்தலாலும், கால் நிலந்தோய்தலாலும் மண்ணக மடந்தையே என மனந்தேறினன். பாவையோடு பேசவேண்டுமென்ற ஆசை! ஆவலோடு, ஊரேது? உலகேது? உமது பேரேது? என வினவுகின்ருன். பாவை நல்லாள் பதிலுரைத்தாளில்லை. வார்த்தை யொன்று பேசலாகாதோ

என்று கெஞ்சினன். மிஞ்சினள் தலைவி. எனவே கன்னியின் கட்டழகைப் பாராட்டி, காந்தர்வ மணத்திற்கு இசையச் செய்கிறன் காவலன்.

இதற்குள் வேங்கை நிகர் வேந்தனைப் பிரிந்த வீரர்கள் தேடி வந்தனர். அரசனை அழைத்துக்கொண்டு அணிநகர் சேர்ந்தனர். தலைவனைப் பிரிந்த தலைவி அழுதாள், விழுந்தாள், எழுந்தாள், என் செய்வது? மன்னனைப் பிரிந்த மயக்கத்தால் மூர்ச்சையுற்று வீழ்ந்தாள். இதற்குள் தலைவியைப் பிரிந்த தோழியரும் வருகின்றனர். நங்கையின் நிலைகண்டு நடுங்கினர். தூக்கமோ? அன்றித் துணைவரைப் பிரிந்த ஏக்கமோ? என்று அரற்றுகின்றனர். குறிப்பு சிலவற்றல் தலைவனைப் பிரிந்தமையே தக்க காரணமெனத் தெளிந்தனர். பெற்ற தாயும் உற்றது அறிந்து ஓடோடி வருகின்றுள். உவகையடைகின்றுள். பூவெடுக்க வந்த பூவை புதையல் எடுத்து வந்த செய்தி அறிந்து சிந்தை மகிழ்கின்றுள்.

பையப் பழம்நழுவிப் பாலில் விழுந்தது நான்
செய்த தவமோ? மகள்முன் செய்தபூ சாபலமோ?

என்று இறும்பூதெய்தி ஈன்றமகளை இருகையால் இறுகத்தழுவி 'ஒன்றுக்கும் அஞ்சாதே, போகம் உன் பங்காச்சி' என்று உறுதி கூறுகின்றுள்.

அதுபோது மங்கையை மணம் பேசத் தூதுவனை அனுப்புகின்றன் அரசன். சேய்க்கு வரும் சிறப்பறிந்து சிந்தை மகிழ்கின்றுள் தாய். மகளைத் தேரிலேற்றித் தலைவனிடம் அனுப்பி அகமகிழ்கின்றுள். மங்கையை மணந்து மக்களைப் பெற்று மாண்போடு மனைவினை நிகழ்த்துகின்றன் ம்ன்னன். கதையும் முடிந்தது; காப்பியமும்

பெஞ்சை நகர் வாழி! பெரிய நா கேந்த்ரதுரை
கஞ்சமலர் மாது கருணைபெற்று வாழியவே!

என்ற வாழ்த்தோடு முடிகின்றது.

கதையமைப்பு கண்டோம், இனி கவிநயம் காண்போம்:

கவிச்சுவையும் கவிதையழகும் பெற்றிலங்குவன காதற் பிரபந்தங்கள். தெள்ளு தமிழிலே துள்ளு நடையிலே அமைந்து, உவமை நயமும் ஒப்புமையாக்கமும் நிறைந்து விளங்குவன. நயங்காணும் முறையினை நான்கெனக் கூறுவர் வடமொழியாளர். அவை 'திராக்ஷா பாகம்', 'க்ஷீரபாகம்', 'இக்ஷிபாகம்', 'நரிகேளபாகம்' என்ற நால்வகை நிலையன. திராட்சைக் கனிகள் போல் எளிதில் சுவைத்து இன்பம் நுகரும் நீர்மையன சில, இதனைத் திராக்ஷா பாகம் என்பர். தோலை உரித்துச் சுவைக்கத்தக்க வாழைக்கனி போன்றன சில. சில பலாக் கனி போன்று சுளையைப் பிய்த்து, நரம்பினை நீக்கிச் சுவைப்பது

போன்றவை. மட்டையை உரித்து, ஓட்டை உடைத்துப் பருப்பை எடுத்துக் கடித்துச் சுவைத்தாலன்றி சுவை காண இயலாத தேங்காய் போன்றன சில கண்ணிகள். இவை நான்கினுக்கும் நல்லதோர் எடுத்துக்காட்டாக விளங்கி இன்பம் தருவன இக்காதற் பிரபந்தங்கள். கண்ணி சில கண்டு களிப்பெய்துவோம்:

'ஈண்டு நின்றோர்க்குந் தோன்றும், சிறுவரை சென்று நின்றோர்க்குந் தோன்று'வதாகிய மன்னனது மலையை வருணிக்கும் கவிஞரின் கற்பனைத் திறமும் தரமும்தான் என்னே! விண்ணை யிடிக்கும் ஓர் வெற்பு எனக்கூற விழைகின்றார் ஆசிரியர். விண்ணை இடிப்பதற்கும் ஓர் விளக்கம் தரவேண்டுமன்றோ? தன்னை வந்தடைந்தோர்க்குத் தேன் அளிப்பதோடு அமையாதாம் அம்மலை. அள்ளித் தரும் வள்ளல்கள் அடுத்தடுத்து அளிப்பதிலே ஆசை கொள்ளுமாப்போல, தேனோடு தேவரமுதம் அளிக்கவும் ஆசைப்படு கின்றதாம் அம்மலை. எனவேதான் விண்ணைத் தாக்குமளவிற்கு வளர்ந்து விளங்குகின்றதாம். இதனைக் கவிஞன்

தேனளந்த கானவர்க்குத் தேவ ரமுதளக்க
வானளந்து நிற்கும் வராககிரி வேந்தன்.

மலையின் நிலையைக் காட்டிய கவிஞன் அடுத்து மாளிகையின் வாயிற் சிறப்பைக் கூறுமாற்றான் நல்லதோர் முகப்பை நம் கண்முன்னே கொணர்ந்து நிறுத்துகின்றான் பாருங்கள்:

பொன்னிலங்க வச்ரப் பொடியிலங்கப் பொற்கதவு
முன்னிலங்கப் பின்னிலங்க முத்திலங்கும் வாசலினான்.

இதன்கண் உண்மை நாடவேண்டுமே தவிர உயர்வு நவிற்சி கண்டு அயர்ச்சியடைதல் கூடாது.

இனி நாடாள் வேந்தனின் வாய்மையைக் கண்டு வியக்கின்றான் கவிஞன். மறைமொழிகூட ஒருவேளை பொய்த்தாலும் பொய்க்கலாம்; வற்றாத கடலும் வற்றக்கூடும்; திங்களும் ஞாயிறும் தத்தம் நிலை பெயரவும் கூடும்; இவையனைத்தும் பொய்த்தாலும் தான் சொன்ன மொழி பொய்யாதான்— 'நின்ற சொல்லன்' என்பதை இவ்வாறு விளக்குகிறான்.

மாமறைநூல் பொய்த்தாலும், வாரிதிநீர் பொய்த்தாலும்,
சோமரவி பொய்த்தாலும், சொன்னமொழி பொய்யாதான்.

வாய்மையை விளக்கியவன் வள்ளண்மையை விளக்குகின்றான் பாருங்கள்:

அண்டர் தருவுக்கும், அருங்காம தேனுவுக்கும்,
கொண்டல் தனக்கும் கொடைபயிற்றும் செங்கரத்தான்.

கேட்டதெல்லாம் தருவது கற்பக மரம்; கரவாது காப்பது காமதேனு; வரையாது பொழிவது மேகம். இவை யனைத்தும் (எத்துணை சிறப் புற்றிருப்பினும்) இவனிடத்தேதான் கொடைப் பயிற்சி பெற்றன வெனின் இவனது ஈத்துவக்கும் இன்பத்தையும் ஏற்றத்தையும் என்னென்பது ?

கொடைநலம் கண்ட நாம் படைநலம் காணவேண்டாமா ? யானைகள் மாற்றுரை ஆற்ருது அலறும்படி நிலத்திலே மோதி எழுப்பும் பேரொலியை அப்படியே கவிதையில் தீட்டிக் காட்டுகின்ருன் கவிஞன் :

சண்டையிற் பொருங் கொடித்தலம் தகர்த்து வஞ்சரைக்கைக்
கொண்டெடுத் தறைந் துரப்பு கும்பஉக்ர குஞ்சரத்தான்.

இவ்விரண்டடியிலே யானையின் சினத்தையும், களிறு தாக்கக் கதறி யழும் அலறலையும், ஆரவாரத்தையும் நேரில் கேட்பது போன் றில்லையா ? சொல்லடுக்கும், பாமிடுக்கும், சொல் வேகமும் கொண்டு கருதியதைக் கவியாகத் தீட்டும் கவியின் திறம் வியந்து பாராட்டற்பாலது.

உடைதிரைகள் குமுறுகடல் ஒலியுமுகில் இடியுமென
அடையலர்கள் செவிகுடைய அதிருமொலி மணிமுரசான்

என்ற அடிகளில் மணிமுரசில் எழு அதிரொலியை அழகாகத் தீட்டு கின்ருர் கவிராயர்.

மலர்ச் சோலையிலே மங்கை தனித்து மலர்கொய்து கொண்டிருக் கின்ருள். இங்ஙனம் அவள் மலர்கொய்வது கவிஞனுக்கு விந்தையாக இருக்கிறதாம்! ஏன் ? ஏனு ? தன்னிடத்திலேயே மலர்கள் நிறைந்து விளங்க, இரக்கச் செல்வது போன்று— வெண்ணையை வைத்துக்கொண்டு நெய்க்கு அலைவது போன்று— சோலை தோறும் சென்று சென்று பூப்பறிப்பானேன் ? பெண்களின் கண், முகம், கன்னம், கால், கை முதலியவற்றிற்குத் தாமரை, காந்தள், குவளை மலர் போன்றவற்றை உவமை கூறுதல் புலவர் மரபு. இதனை எண்ணத்தில் வைத்தே சரவண பெருமாட் கவிராயர் தாம் இயற்றிய வைரவ நாடார் காதலில், பூப்போன்ற உறுப்புக்கள் எல்லாம் தம்மிடத்தே பூத்திருந்தும் அப்பூங்கொடியாள் என்ன செய்தாள் தெரியுமா ? என்ற வியப்பிற்கு விடை கூறுமுகத்தான்

பூவெல்லாம் தன்னிடத்தே பூத்திருக்கப் பார்த்திருந்தும்
காவெல்லாம் சென்றுசென்று கால்நோவப் பூவெடுத்தாள்

என்று அழகாகக் கூறியுள்ளார். இதனையே வேருெரு முறையில், சுப்பிரதீபக் கவிராயர்,

கொய்யுமலர் வண்டெழுந்து கோகனப் பூவெனச்செங்
கைம்மலரைச் சுற்றக், கடுகிமலர்ப் பூவெடுத்தாள் என்றும்,

காவி இரண்டிருக்கக், கஞ்சமலர் அஞ்சிருக்கப்,
பூவின்நிறங் குன்றுப் புன்முருக்கம் பூவிருக்க,

கோங்கரும் பிரண்டிருக்கக், கோவையிட்ட முல்லைமுகை
பூங்குமுதத் துள்ளிருக்கப், பூஞ்சண் பகமிருக்க,

பூதலத்தி லேதான் பொதிவைத் திரப்பவர்போல்
மாதரசி பூத்த மரந்தோறும் சென்றுசென்று ...
பூவெடுத்தாள் என்றும்,

நயம் தோன்றக்கூறும் நலம் பாராட்டற்பாலது. 'காதலில்' விளங்கும் உயரிய கண்ணிகளிலே, இவையும் சில. ஒப்புமையாக்கம் (Comparative study) ஒப்பற்ற இன்பம் தருவதன்றே? அம்முறையிலே இதனையொத்த பகுதி மேலைநாட்டு இலக்கியங்களிலும் இலங்கக் காண்கின்றோம்; காட்டாக, கவி மில்ட்டன், சுவர்க்க நீக்கத்தில் கூறும் பகுதி காண்க:

Not that faire field
Of ENNA, where PROSPERIN gathering flours
Her self a fairer Floure by gloomie Dis
was gathered. (Paradise Lost Bk-IV.)

மலர் கொய்த மங்கை ஒருத்தியையும் மலரென்று எண்ணி அவளையும் சேர்த்து மலர் பறிப்பது போன்று பறித்துச் சென்றானும்!

இளம்பெண் ஒருத்தி ஏகாந்தமாயிருக்க, அவளை எதிர்ப்பட்ட தலைவன், 'ஊரேது இருக்கும்? உலகேது? உமது திருப்பேரேது? வார்த்தையொன்று பேசினால் ஆகாதோ? எனப் பலவாறு வினவியும் பதிலுரைத்தாளில்லை அப்பாவை நல்லாள். தலைவனுக்கோ பேச வேண்டுமென்று கொள்ளை ஆசை. எனவே சிறிது சினந்து,

வெள்ளரிக் காயா? விரும்பும்அவ ரைக் காயா?
உள்ளமிள காயா? ஒருபேய்ச் சுரைக்காயா? என்கின்றான்,

இதில் எடுத்த எடுப்பில் ஏதோ வெள்ளரிக்காயும், அவரைக்காயும். மிளகாயும், சுரைக்காயும் தான் தோன்றுகின்றனவே தவிர, தெளி பொருளேதும் தென்பட்டிலது. இவண் சிலேடை அமையப் பெற்றுள்ளது. வெள் + அரி; விரும்பும் அவரைக் + காயா; உள்ளம் + இளகாயா; பேச்சு + உரைக்காயா என்று கொண்டால் பொருள் இனிது விளங்கும். இப்போது பாருங்கள்: ஒருகாலத்து வெண்

ணிறத்தோடு விளங்கியவர் திருமால். அவருடைய அவதாரங்களில் தூணிலிருந்து தோன்றிய நரசிங்காவதாரமும் ஒன்றன்றோ? எனவே தூண் திருமாலுக்குத் தாயாயிற்று; பேசாது நிற்கும் தலைவியைத் (திருமாலுக்குத் தாயாகிய) தூணா? என்கின்றான் எனக்கொள்க. விரும்புகின்றவர்களைக் காயாத (கோபியாத) குணம் படைத்தவளாயிற்றே? என்பால் உள்ளம் இளகாயா? ஒரு பேச்சாகிலும் உரைக்கலாகாதா? என்ற சிலேடையில் அமைந்த சொற்களே இவை. இவற்றின்கண் அமைந்த நயம் எண்ணி மகிழ்தற்குரியது. இனி பாட்டைப் படியுங்கள்:

வெள்அரிக்கு ஆயா! விரும்புமவரைக் காயா!
உள்ளம் இளகாயா! ஒருபேச்சு உரைக்காயா!

இஃது அழகிய சொக்கநாதப் பிள்ளை பாடிய 'முத்துச்சாமிப் பிள்ளை காதலில்' காணப்பெறும் கண்ணியாகும்.

தலைவனும் தலைவியும் கூடிப் பிரிகின்றனர். பிரிவாற்றாமையால் கண்ணீர் வடிக்கின்றாள் தலைவி. இதனைக்

காலாயுதக் கொடியோன் கையாயுத விழியாள்
மாலாயுத மீன்ற மாமணியைத் தானுதிர்த்தாள்.

எனக் கவித்திறம் தோன்றக் கூறுகின்றார் கவிராயர். உட்பொருளை ஊன்றிப் பார்த்தால்தான் அழகையும் பொருளையும் அறியமுடியும். இவண் காலாயுதம் என்றது காலையே ஆயுதமாகக் கொண்டு சண்டை செய்யும் கோழியை. கோழியைக் கொடியாகக் கொண்டவன் முருகன்; எனவே காலாயுதக் கொடியோன் என்றால் முருகனைக் குறிக்கும். அவனது கையாயுதம் ஒளிவீசும் வெற்றிவேல். மலர் விழியின் கூர்மைக்கு முருகனது வேல் உவமானம்; முருகனது கூர்மையான வேலைப்போன்ற விழியாள் என்க.

இனி மாலாயுதமீன்ற மாமணியைத் தானுதிர்த்தாள் என்பது மால் + ஆயுதம். மால் = திருமால், அவனது ஆயுதம் சங்கு. சங்கு தருவது முத்து, இதனையே இங்கு மாமணி என்றார். முத்துப்போல கண்ணீரை உதிர்த்தாள். எனவேதான் மாலாயுதம் ஈன்ற மாமணியைத் தானுதிர்த்தாள் என்கிறார். காதலனைப் பிரிந்த காதலி முத்து முத்தாகக் கண்ணீர் வடித்தாள் என்பதுதான் பொருள். இப்போது பாடலைப் பாருங்கள்; பன்முறையும் படியுங்கள். முயன்று வருந்திப் பெறும் பயனில்தானே முழு இன்பம் உண்டு!

தலைவனைக் காணாது தவித்தாள் தலைவி. பின் பலவாறு எண்ணித் துணிந்து தலைவனது ஊருக்காகிலும் செல்லலாமென்று எண்ணுகின்றாள். தலைவன் தன் ஊர் ஒன்பதூர் எனச் சொன்னது நினைவிற்கு வருகின்றது. எழுகின்றாள், உடனே

ஏக்கம் அவளை எழவொட்டாது தடுகின்றது. ஏன்? காரணம் கவியிலே:

> பேரூர் வழியே நாம் பின்தொடர்வோம் என்றாலும்
> ஓரூர் என்றானிலையே! ஒன்பதூர் என்றானே!

என்பதுதான். தலைவனது ஊர் நவபுரி; (நவ—ஒன்பது) இதனை ஒன்பதூர் என்று வைத்து அழகுபடுத்தியுள்ளார் ஆசிரியர். இதனை அறியாததே தலைவியின் தயக்கத்திற்கும் மயக்கத்திற்கும் காரணம் என்க. 'கன்னிவாடி ஜமீன்தார் காதலில்' இதுபோன்றதொரு காட்சி காணத்தக்கது.

> ஆடுமயில் வாகனமே! ஆரணங்கே! பூவைகன்னி
> வாடிஎன்று சொன்னானே! வாழுமூர் சொல்லலையே!

என்பதுதான் அது. கன்னி, வாடி என்றுதானே சொன்னார். ஊரைச் சொல்லவில்லையே? என்று வருந்துகின்றாளாம் தலைவி; அவனுடைய ஊரே கன்னிவாடி என்பதுதானே!

புலவரைக் கண்டஞ்சி ஒளியும் உலுத்தர் செயலைச் சொல் லோவியமாக்கிக் காட்டும் அவலக் காட்சி அனைவரும் அறியத் தக்கது.

> ஆரடி வீதியிலோ ரேடுகொண் டோடியே
> அவசரம தாய்வருகிறார்
> ஐயையோ! புலவன்மார் போலே இருக்கின்றது
> யாரென்று மெல்லஎட்டிப்
> பாரடி தலைமறைய நின்றுகொண் டவர்நெடும்
> பாதைவழி போகிறதுதான்;
> பரண்மேல் எனைத்தூக்கி விட்டுவிடு, தாளையடை,
> பழிகாரி! கதவுபோடு,
> கூர்மைமொழி கேட்டதிக சீக்கிரம் வந்திடுவர்
> குதிருக்குள் ளேயொளித்துக்
> கொள்ளடி ... ...

முத்திருளப்ப பிள்ளைக் காதலில் காணப்பெறும் வித்தகக் கவி இதுவாம்.

இதுவன்றி பல்வகைச் சுவை பயக்கும் பாவடிகளும் உண்டு. நீங்களும் சுவையுங்கள்.

> வட்ட மதிக்களங்கம் மாறத் தடவுதல்போல்
> இட்ட கொடியாடும் இயல்சூழ் நவபுரியான்;

> வால்அடித்து மேல்பதுங்கி வாய்பிளக்க வாள்கிழிக்க
> வேல்பிடித்து வீரர்குத்த வீழ்புலிக்கு மேல்துடிக்க;

வல்லைப்போ ருக்கொ துங்கேன் வாள்வேல் படைக் கொதுங்கேன்
மெல்லிநல்லீர்! உங்கள்விழி அம்புக்கு அச்சமுற்றேன்;

தேடுபுகழ் வேந்தனுடன் செல்லுமன தைப்பிடிக்க
ஓடுதல்போ லோடியாடி ஓய்வார் சிலமடவார்;

வல்லியனை யாள்பதித்த வாய்வடுவைக் கண்டுதங்கள்
மெல்லிதழிற் பல்பதித்து மீள்வார் சிலமடவார்;

முன்கை அணிவளைகள் மூச்செறியக் காய்ந்துருகி
மென்குவளைக் கண்ணீரின் வெள்ளத்தால் ஆறியதே;

என்பன போன்ற சில கண்ணிகள், எழிலும் ஏற்றமும் பெற்று, விளங்குகின்றன—கற்பனைத் திறமும், சுவை நலமும்—நகைச் சுவையும் அமைந்துள்ளமை கண்கூடு.

இங்ஙனம் சொற்சுவையும் பொருட்சுவையும் மிக்க காதலிலக்கியங்களில் அளவிற்கு விஞ்சிய சிருங்காரச் சுவை நிரம்பியுள்ளதைக் குறையாகக் காட்டுவர் சிலர். இது காலத்தின் குறையே தவிர காதல் பிரபந்தத்தின் குறையாகாது. தமிழருமை யறியாத காலம்; செல்வம் மிக்கோர் தெலுங்கையே தாய்மொழியாகக் கொண்டவர்களாக இருந்தனர். அதிலும் சிற்றின்பத்திலே சிந்தை தோய்ந்திருந்தவர்கள். அவர்களை மகிழ்வித்துப் பரிசு பெறும் நோக்கோடு எழுந்தனவே இக் காதற் பிரபந்தங்கள். எனவே அவர்களை மகிழ்வூட்டுமாற்றான் ஆங்காங்கே சிற்சில சிற்றின்பச் சித்திரங்களும் குறிப்புக்களும் அமைத்துப் பாடும் அவசியம் ஏற்பட்டது. எனவே குறையைக் காலக்குறையாகக் கொண்டு 'நெல்லுக்கும் உமியுண்டு, நீருக்கும் நுரையுண்டு, புல்லிதழ் பூவிற்கும் உண்டு' என்ற அளவிலே கொண்டு கவியின்பம் காண்பதே பெருந்தன்மையாகும். அன்றியும் 'கல்லைக் கண்டால் நாயைக் காணோம், நாயைக் கண்டால் கல்லைக் காணோம்' என்ற முறையிலே காமக் களி நோக்கோடு காண்போர்க்குக் காப்பியச் சுவை தோன்றா; காப்பியச் சுவை நோக்குவோர்தம் நோக்கிற்குக் காமவிகாரம் தோன்றுமாறில்லை. எனவே இலக்கியச் சுவை ஒன்றே எண்ணமாகக் கொண்டு ஏற்றம் பெறுக! இன்பம் மாந்துக!

இத்தகைய, சிந்தைக்கு விருந்தாகவும், செவிக்கு இன்பம் தருவதாகவும் அமைந்து, சொல்லாலும் பொருளாலும் சுவை பல நல்கும் காதற் பிரபந்தங்களை — சிற்றிலக்கியங்களைத் — தமிழர் விரும்புவதில் வியப்பில்லை—வெறுப்பதில்தான் வியப்பு!

தமிழில் தாவரம்.

கு. சீநிவாசன், M. Sc.,
தாவர விரிவுரையாளர், அண்ணாமலைநகர்.

கொன்றை :

தாவர நூலில் கொன்றை காசியா பிஸ்டுலா (Cassia fistula, Linn) எனப்படும். இதுவும் பிண்டியைப்போல சிசால்பினே (Caesalpineae) என்ற தாவரக் குடும்பத்தைச் சார்ந்த சிறு மரம். இதன் இலை பல்லலகுடையது. எட்டு முதல் பதினறு வரை சிற்றிலைகள் உண்டு. சிற்றிலைகள் சற்று நீண்ட முட்டை வடிவானவை. இம்மரம் முல்லை நிலத்தைச் சார்ந்தது. கார் காலத்திற் பூக்கும். தலைமகளைப் பிரியும் தலைமகன் இம்மரம் பூத்தற்கு முன் வருவதாகக் கூறிச் செல்லுதலும், இப்பருவத்திற்குள் வந்து உடனுறைதலும், வருந்துணையும் தலைமகள் ஆற்றியிருத்தலும், ஆற்றுளுது அலம் வருதலும் ஆகிய இவை பற்றிய பண்டைத தமிழ் பாக்களில் கொன்றை பல படியாகப் பயிலப்படுகின்றது. இந்நாளில் கொன்றை கார் காலந் தொடங்குவதற்குமுன் வைகாசி ஆனி மாதங்களிலேயே பூத்து விடுகின்றது. பூக்கள் நல்ல மஞ்சள் நிறமானவை. கொத்துக் கொத்தாகப் பூக்கும் இயல்புடையது. மரத்திலுள்ள பூங்கொத்து கீழ் நோக்கித் தொங்கிக்கொண்டிருக்கும். இதனைத்

தூங்கிணர்க் கொன்றை—குறிஞ்–86

என்று கபிலர் கூறுவர்.

வயங்கிணர்க் கொன்றை—கலி–102
மெல்லிணர்க் கொன்றை—கலி–103
முறியிணர்க் கொன்றை—முல்லைப்–94
ஒள்ளிணர்க் கொன்றை—அக–197
நீடிணர்க் கொன்றை—அக–364
இழையணி மகளிரின் விழைதகப் பூத்த
நீடு சுரி இணர சுடர்வீக் கொன்றை—நற்–302

என வருவனவுங் காண்க. தூங்கிணர்க் கொன்றையின் இவ்வியல்பினை நன்கறிதற்பொருட்டு இப் பல்கலைக் கழகத்தின் தாவரப் பூங்காவில் சிலவாண்டுகட்குமுன் ஒரு சிறு சோதனை செய்யப் பட்டது. கீழ் நோக்கித் தொங்குகின்ற இதன் பூங்கொத்தை மேனேக்கித் தூக்கிவைத்துக் கட்டிவிட்டால் இவ்விணரின் நுனிப் பாகம் இரண்டு நாளைக்குள் திரும்பவும் கீழ்நோக்கி வளர ஆரம்பிக்கின்றது. சற்று வளர்ந்தவுடன், மறுபடியும் இவ்விணரின் நுனியைத் தூக்கி மேனேக்கிக் கட்டிவைத்தால், திரும்பவும் இந்நுனியிணர் கீழ் நோக்கியே வளர்கின்றது. அரும்புதலும், வளர்ச்சியும் சிறிதும் குன்றவில்லை. இவ்வரும்புகளும் ஒப்பிணர் அரும்புகளும் போதாகி ஒரே நாளில் மலர்கின்றன. இச்சோதனையை வேறு வேறு கொன்றை மரங்களில் வெவ்வேறிணர்களில் பன்முறை செய்துபார்த்தபோதும் இதன் பூங்கொத்து தன்னியல் மாருது கீழ் நோக்கியே வளர்கின்றது. இவ்வியல்பினைத் தமிழிலக்கியம்

தூங்கிணர்க் கொன்றையென அங்ஙனமே கூறுவதை எண்ணுங்கால் உள்ளம் மட்டின்றி மகிழ்கின்றது.

பூக்களில் பச்சை நிறமுள்ள ஐந்து புறவிதழ்களும், பொற்காசு போன்ற ஐந்து அகவிதழ்களும் உள்ளன. அகவிதழ்களும் (Petals) கேசரங்களும் (Stamens) வடிவில் வேறுபாடுடைமையின் ஒருபுறச் சமச்சீர் (Bilateral Symmetry) உடையதாக இருக்கும். மொட்டின் அடிப்புறத்து அகவிதழ்கள் சற்று பெரிதாயும் மேற்பாகத்து அக விதழ்களை மூடிக்கொண்டுமிருத்தலின் இம்முகை தவளையின் வாய் போலத் தோன்றும். இதனை,

செல்வச் சிறுஅர் சீறடிப் பொலிந்த
தவளை வாஅய பொலஞ்செய் கிண்கிணிக்
காசி னன்ன போதீன் கொன்றை —குறுந்–148

என்றார்.

பொதுவாக, கொன்றை மே, ஜூன் மாதங்களில் பூக்குமெனத் தாவர ஆசிரியர் கூறுவர். கொன்றை மலர்தலைக் கார் காலத் தொடக்கத்தின் அறிகுறியாகக் கருதினர் தமிழ் மக்கள்.

நாண்மலர்க் கொன்றையும் பொலந்தார் போன்றன
... ...
கார்மலிந் தன்று நின் குன்று —பரி–14

பிரிந்து சென்ற தலைவன் குறித்த பருவத்தில் திரும்புதல் உண்டெனினும் ஒரோ வழி காலந் தாழ்க்குமாயின் தலைவி துன்புறுதலும் ஆற்றியிருக்குமாறு தோழி கூறுதலும் தமிழ் மரபு. தலைவியை ஆற்றப்புக்க தோழி அவள் ஏற்கும்வண்ணம் தக்க சான்று கூறித் தேற்றுதல் வேண்டும். பருவம் வருந்துணையும் ஆற்றுவித்த தோழி அவன் வரல் குறித்த பருவ வரவின்கண், இனி ஆற்றுவிக்குமாறு எங்ஙனம் எனக்கவன்று ஒரு சிறு சூழ்ச்சி செய்கின்றாள். பருவங் கண்டழிந்த தலைவியை நோக்கி இது பருவமன்றெனக் கூறி ஆற்றுதல் வேண்டுமென வற்புறுத்தும் வகையில் பாட்டொன்றுளது. உண்மையில் மிகச் சிறந்த இக்குறுந்தொகைப் பாட்டினைக் கோவர்த்தனர் என்ற புலவர் நன்கு பாடியுள்ளார்.

மடவ மன்ற தடவுநிலைக் கொன்றை
கல்பிறங் கத்தஞ் சென்றோர் கூறிய
பருவம் வாரா வளவை நெரிதரக்
கொம்புசேர்க் கொடியிணர் ஊழ்த்த
வம்ப மாரியைக் காரென மதித்தே —குறுந். 66

'பிரிந்து சென்ற தலைவன் குறித்த காலம் இன்னும் வரவில்லை. காலமல்லாக் காலத்தில் பெய்த மழையைக் காரென மதித்து இக் கொன்றை பூத்துவிட்டது. முதுமையில் தட்டுத் தடுமாறி வழி நடப்பார்போலக் கீழ்நோக்கி வளரும் பூங்கொத்துக்களையுடைய இக்

கொன்றை மரம் மிக்க அறியாமையையுடையது. ஆதலின் வருந்தற்க' என்று தோழி கூறுவதாக அமைந்துள்ளது. இச் செய்யுளில் புலவர் உள்ளம் இயற்கையுண்மையை மறைக்க முனைகின்றது. இதனுல் பாட்டின் சுவை நலம் சிறிதும் குன்ருது சிறக்கின்றது.

மறந்து கடல்முகந்த கமஞ்சூல் மாமழை
பொறுத்தல் செல்லாது இறுத்த வண்பெயல்
கார்என் றயர்ந்த உள்ளமொடு தேர்வில
பிடவமும் கொன்றையுங் கோடலும்
மடவ வாகலின் மலர்ந்தன பலவே —நற். 99

ஏதில பெய்ம்மழை கார்என மயங்கிய
பேதையங் கொன்றைக் கோதைநிலை நோக்கி
எவன்இனி மடந்தைநின் கலிழ்வே நின்வயின்
தகைஎழில் வாட்டுநர் அல்லர்
முகையவிழ் புறவின் நாடிறந் தோரே —ஐங். 462

என்பனவும் இக்கருத்தில் எழுந்தன. இதற்கடுத்த நிலையில் எழுந்த இளங்கீரந்தையார் செய்யுள் பின்வருமாறு.

செல்வச் சிருஅர் சீரடிப் பொலிந்த
தவளை வாஅய பொலஞ்செய் கிண்கிணிக்
காசி னன்ன போதீன் கொன்றை
குருந்தொடு அலம்வரும் பெருந்தண் காலையும்
காரன்று என்றி யாயின்
கனவோ மற்றிது வினவுவல் யானே —குறு. 148

பருவமன்றெனக் கூறிய தோழியிடம் தலைவி வினவுகின்ருள், 'கிண்கிணிக் காசினையொத்த முகையீன்று கொன்றை மலர்ந்துளது. கொன்றை குருந்த மரத்துடன் காற்றினுல் சுழல்வதாயிற்று. மிக்க தண்மையுடன் கார்ப் பருவந் தொடங்கிவிட்டது. இப்பருவத்தைக் காரன்று என்றியாயின் இங்ஙனமெல்லாந் தோற்றுவது கனவோ' என்று.

இதற்கும் மேலாக நெஞ்சையள்ளும் குறுந்தொகையுமொன்றுளது. உண்மையில் கார்காலந் தொடங்கிவிட்டது. தலைவன் வரவில்லை. தோழிக்குக் கவற்சி பெரிதாயிற்று. இதனையுணர்ந்த தலைவி, "அவர் பொய் கூருர் ஆதலின், புதுப் பூங்கொன்றைக் கானம் காரெனக் கூறினும் யானோ தேறேன்; இது பருவமன்று" என்றுரைப்பதாக ஓதலாந்தையார் மிகத் திறம்படப் பாடுகின்ருர்.

பொன்செய் புனையிழை கட்டிய மகளிர்
கதுப்பிற் ருேன்றும் புதுப்பூங் கொன்றைக்
கானம் காரெனக் கூறினும்
யானோ தேறேன் அவர் பொய்வழங் கலரே —குறு. 21

இச் செய்யுளைப் பருவங் கண்டுழியும் பொய் கூறுரென்று தலைவி ஆற்றியிருந்ததற்கு மேற்கோளாகக் காட்டுவர் நச்சினார்க்கினியர். (தொல். அகத். 14). மற்று, குறித்த பருவத்தில் தலைவன் வந்ததைத் தலைவிக்கு அறிவிக்கும் தோழி, பருவ வரவு கூறி அவன் வரவறிவிப்பதுமுண்டு.

> ... ... புறவின்
> பொன்வீக் கொன்றையொடு பிடவுத் தலையவிழ
> இன்னிசை வானம் இரங்கு மவர்
> வருது மென்ற பருவமோ இதுவே. —நற். 246.

கொன்றை யுள்ளிட்ட காசியா (Cassia) இனத்தில் இருபத்து மூன்று வகை தமிழ் நாட்டில் உள்ளதென்பர். (Gamble). காசியா பிஸ்டுலா (Cassia fistula, Linn) ஆகிய கொன்றையின் வண்ண நொசி எண் $2\times=24$ என டிஷ்லர் (Tischler, 1922) என்பாரும் $2\times=28$ என பந்துலு (Pantulu, 1946) என்பாரும் கூறுவர். இதன் ஆங்கிலப் பெயர் இந்திய லாபர்னம் (Laburnum) என்பது. இதன் பூவில் நறுமண மிருத்தலின் இதனைச் சூடிக்கொள்வதுண்டு. இதனை இறைவற்குரிய பூவாகக் கடவுள் வாழ்த்துப்பாக்கள் விளக்குகின்றன.

> கார்விரி கொன்றைப் பொன்னேர் புதுமலர்த்
> தாரன், மாலையன், மலைந்த கண்ணியன். —அக. 1

> கண்ணி கார் நறுங் கொன்றை காமர்
> வண்ண மார்பின் தாருங் கொன்றை —புற. 1

> ... ... விரியிணர்க்
> கொன்றை யம்பைந் தார்அக லத்தன். பதிற். 1

கொன்றையின் காய் முற்றியவுடன் ஓரடி முதல் ஒன்றரையடி வரை நீண்டு கருநிறமுடையதாக விருக்கும். விதைகள் தனித்தனி அறைகளில் முற்றுதற்கு ஏற்ப, காய் உள்ளீடு உடையதாக இருக்கும். இதனைப்

> புழற்காய்க் கொன்றைக் கோடணி கொடியிணர். —நற். 296

என்றனர். இக்காயை பாணர் பெருமுழவடித்தற்குப் பயன்படுத்தும் கோல் போன்றதெனக் கூறுவர்.

> ... ... பாணர்
> அயிர்ப்புக் கொண்டன்ன கொன்றையந் தீங்கனி. —நற். 46

நன்கு மலர்ந்த கொன்றை மரத்தில் முந்திய ஆண்டின் காய்களும் தொங்கும். இதனைத் தவஞ்செய்வார் சடைமுடி போன்றதென்பர்.

> பொரியரை ஞெமிர்ந்த புழற்காய்க் கொன்றை
> நீடிய சடையொடு ஆடா மேனிக்
> குன்றுறை தவசியர் போலப் பலவுடன். —நற். 141

தமிழ் நாட்டுப் பெண்களின் பண்பாடு.

சாமி. சிதம்பரனர்.

பெண்கள் பெருமை

'ஆவதும் பெண்ணுல் அழிவதும் பெண்ணுல்' என்பது ஒரு பழமொழி. இந்தப் பழமொழியைப் பொருளற்றது என்று சொல்லிவிட முடியாது. இது இடைக்காலத்தில் எழுந்த பழமொழியன்று. பழமொழிபோற் படைத்த புதுமொழியும் அன்று. இது தமிழர்களின் பண்டைக்காலப் பண்பாட்டிலிருந்து பிறந்த ஒரு பழமொழியாகும்.

இந்தப் பழமொழி நடுத்தர வகுப்புக் குடும்பங்களுக்கே பொருந்தும். எண்ணற்ற செல்வம் படைத்த குடும்பத்தினர்க்கும், ஒன்றும் இல்லாமல் அன்றுடம் உழைத்துப் பிழைக்கும் குடும்பத்தினர்க்கும் பொருந்தும் என்று கூறமுடியாது.

ஏராளமான வருமானம் பெறும் குடும்பத்துப் பெண்கள் தங்கள் குடும்ப வரவு செலவைப்பற்றிக் கவலைப்பட வேண்டுவதில்லை. அவர்கள் தங்கள் மனம்போலப் பொழுதுபோக்கமுடியும். உழைத்துப் பிழைக்கும் குடும்பத்துப் பெண்களுக்கும் வரவு செலவுக் கணக்குப் பார்க்க வேண்டிய கவலையில்லை. உழைப்பால் ஊதியங் கிடைத்தால் உணவுண்டு வாழும் வாழ்வு, இன்றேல் பட்டினி வாழ்வு. இது உழைப்போர் நிலைமை.

நடுத்தர வகுப்பினரின் நிலைமை வேறு. அவர்களிற் பெரும்பாலும் ஆண்களேதாம் பொருள் ஈட்டுபவர்கள். பெண்கள் ஆண்மக்களின் வருவாய்க்குத் தக்கவாறு செலவு செய்து குடும்பத்தை நடத்த வேண்டும். மனைவி, கணவனுடைய வருவாய்க்குமேல் செலவு செய்தால் அந்தக் குடும்பம் உருப்படாது. முன்னுக்கு வராது. எப்பொழுதும் அக்குடும்பத்தில் கவலையும் துன்பமுந்தான் கூத்தாடிக் கொண்டிருக்கும். கணவன் மனைவிகளிடம் ஒற்றுமையும் இராது. சண்டை சச்சரவுகள் தலைநிமிர்ந்து தாண்டவமாடும். இதை எண்ணித்தான் மேற்கண்ட பழமொழி எழுந்தது என்பதில் ஐயம் இல்லை.

கட்டுச் செட்டாகச் செலவு செய்யும் பெண்ணுல் குடும்பம் முன்னுக்கு வரும். குடும்பத்திலே செல்வம் பெருகும். ஊரார் இதைப் பற்றிப் பெருமையாகப் பேசுவர். 'அவள் அடிவைத்த பிறகுதான் குடும்பம் முன்னுக்கு வந்தது; அவள் நல்லபேறு உள்ளவள்; திருமகளுக்கு ஒப்பானவள்'' என்று புகழ்ந்து பேசுவர். இவ்வாறு, குடும்பத்திற் கவலையுள்ள பெண்களைப் போற்றும் வழக்கத்தைப் பழந் தமிழ்நூல்களிலே காணலாம்.

"யாய் ஆகியளே விழவுமுத லாட்டி

தலைவியானவள், தலைவன் செல்வம் பெற்று, மகிழ்ந்து வாழ்வதற்குக் காரணமாக உள்ளாள்'' (குறுந்தொகை 10)

என்பது குறுந்தொகைப் பாட்டு. குறுந்தொகையின் மற்றொரு பாடலும் இதை விளக்கமாகக் கூறுகின்றது.

“உடுத்தும், தொடுத்தும், பூண்டும், செரீஇயும்
தழை அணிப் பொலிந்த ஆயமொடு துவன்றி,
விழவொடு வருதி நீயே; இஃதோ
ஓர் ஆன் வல்கிச் சீர் இல் வாழ்க்கை
பெருநலக் குறுமகள் வந்தென
இனிவிழவு ஆயிற்று என்னும் இவ்வூரே”

என்பது குறுந்தொகையின் 295-வது பாடல்.

பரத்தையர் கூட்டத்திலிருந்து பிரிந்து வந்தான் தலைவன்; அவன் ஊடியிருந்த தலைவியைச் சமாதானம் செய்யும்படி தோழியை வேண்டிக்கொண்டான். அப்பொழுது அத்தோழி அத்தலைவனிடம் கூறியது இது.

“தலைவனே, நீ இப்பொழுது பரத்தையர் கூட்டத்தொடு சேர்ந்து நீர் விளையாடிவிட்டு வருகின்றாய். அப்பரத்தையர்கள், தழைகளை உடையாக உடுத்தினர்; மாலையாகத் தொடுத்து அணிந்தனர்; காதணி முதலிய அணிகலன்களாகவும் பூண்டனர்; கூந்தலிலே மலராகவும் செருகினர். இவர்களுடன் சேர்ந்து விளையாடிவிட்டு வருகின்றாய். ‘இவன் தன் காதலியை மணப்பதற்குமுன் இக்குடும்பம், ஒரு பசு மாட்டால் உணவு பெற்று வாழ்ந்தது. இத்தகைய செல்வச் சிறப் பற்ற குடும்பம், நல்ல அழகுள்ள இளம்பெண்ணை இவன் மணந்ததும் இப்பொழுது செல்வம்பெற்று விளங்குகின்றது. பரத்தையருடன் கூடி நீர் விழா ஆடுதற்குரிய செல்வத்தைப்பெற்றது.’ என்று இவ் வூரார் உரையாடுகின்றனர்.”

இதுவே மேற்கண்ட பாடலின் பொருள். இவைகளால் பெண்ணால்தான் ஒரு குடும்பத்திலே செல்வம் பெருகும் என்ற நம்பிக்கை பழந்தமிழ் மக்களிடம் குடிகொண்டிருந்ததைக் காணலாம்.

கணவன் வாழ்வே மனைவியின் வாழ்வு

கணவன் செய்யும் தவறுகளைப் பொறுத்துக்கொள்ளும் குணம் பெண்களின் பண்பாகும். பரத்தையரிடம் சென்று வந்த கணவனுடன் முதலில் ஊடல் கொள்ளுவார்கள். பின்னர்க் கூடி மகிழ்வார்கள். இவ் வழக்கத்தை மருதத்திணைப் பாடல்களிலே காண்கின்றோம்.

நல்ல குடும்பத்துப் பெண்கள் தமது கையாலேயே கணவனுக்கு உணவு பரிமாற விரும்புவார்கள். தாமே சமைத்த உணவைத் தமது கையாற் பரிமாறுவதில் அவர்களுக்கொரு தனியின்பம். தான் சமைத்த உணவைத் தனது கணவன் சுவைத்து உண்பதைக்

கண்டால் அவர்கள் அடையும் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. இது பண்டைத் தமிழ்ப் பெண்களின் பண்பு. இதனை விளக்கும் குறுந் தொகைப் பாட்டு ஒன்று கீழ்வருவது.

"முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம், கழாஅது உடீஇக்;
குவளை உண்கண் குய்ப்புகை கமழத்
தான் துழந்து சுட்ட தீம்புளிப் பாகர்,
'இனிது' எனக் கணவன் உண்டலின்,
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒள் நுதல் முகனே."

(குறுந்தொகை 167)

இதுவே பெண்ணின் பண்பைக் காட்டும் குறுந்தொகைப்பாட்டு.

"காதலி கணவனுக்குச் சமைத்தாள். காந்தள் மலர்போன்ற மெல்லிய விரல்களால், தயிரைப் பிசைந்தாள். அந்தக் கையை ஆடையால் துடைத்துக்கொண்டாள். அந்த ஆடையைத் துவைக் காமல் அப்படியே உடுத்தியிருந்தாள். இனிய புளிக்கறியைச் சமைத் தாள். அதைத் தாளிக்கும்போது, அதிலிருந்து குய் என்ற ஓசை யுடன் எழுந்த புகை அவள் கண்களில் படிந்தது. அதையும் பொருட் படுத்தாமல் சமைத்த உணவைக் கணவனுக்குப் பரிமாறினாள், அவன் அதை இனிமை! இனிமை!! என்று சொல்லிக்கொண்டு சாப்பிட்டான். அதைக்கண்டு அவளுடைய முகம் மிகவும் மகிழ்ச்சி யடைந்தது. சமைக்கும்போது அடைந்த துன்பம் மறைந்தது."

இதுவே இப்பாடலில் அமைந்திருக்கும் பொருள். இதனால் பழங்காலத்துப் பெண்களின் இயல்பு விளங்குகின்றது. கணவன் வாழ்வே தம் வாழ்வென்று அவர்கள் வாழ்ந்தனர்.

பெண்களின் தன்மானம்

இக்காலத்தில் படித்திருக்கும் ஆண்களிற் பலர், பெண் கொடுப்போர் பணமும் கொடுக்கவேண்டும் என்று எதிர்பார்க்கின் றனர். மணம் செய்துகொண்ட பெண்களிலுங்கூட, செல்வமுள்ள குடும்பத்திலே பிறந்தவர்கள், தந்தையின் உதவியை எதிர்பார்த்து நிற்கின்றனர். புகுந்த வீட்டைவிடப் பிறந்த வீட்டைப்பற்றியே பெருமையாகப் பேசுவார்கள். இந்த முறை பழந்தமிழர் பண்பாட் டுக்கு மாறானதாகும்.

பழந்தமிழ்ப் பெண்கள் தனது கணவன் தேடும் செல்வத்தைக் கொண்டே வாழ்க்கை நடத்திவந்தனர். தன் கணவனிருக்கும்போது தந்தை வீட்டின் உதவியைப் பெறுவது அவமானம் என்றுகூட எண்ணினர். இதனை ஒரு நற்றிணைப் பாட்டுத் தெளிவாக எடுத் துரைக்கின்றது.

"அறிவும் ஒழுக்கமும் யாண்டுஉணர்ந் தனள்கொல்?
கொண்ட கொழுநன் குடிவறன் உற்றுளனக்
கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளாள்
ஒழுகு நீர் நுணங்கு அறல் போலப்
பொழுதுமறுத்து உண்ணும் சிறுமது கையளே"

(நற்றிணை 110)

"விளையாட்டுப் பெண்ணாக இருந்த அவள் இப்பொழுது மனையாளுக் குரிய அறிவையும், ஒழுக்கத்தையும் எப்படித் தெரிந்துகொண்டாளோ! அவளைக்கொண்ட கணவன் குடும்பம் வறுமையடைந்தது. அதை அறிந்த அவள் தந்தை நல்ல உணவுப் பொருள்களைக் கொடுத் தனுப்பினான். அப்பொருள்களைக்கொண்டு வளமாக உண்ணும் சோற்றைப்பற்றி அவள் நினைக்கவே இல்லை. நீரின் வழியாலே தானும் ஓடும் கருமணலைப்போலக் கணவன் வழியிலேயே அவள் நடக்கின்றாள். வேளை தவறி உண்ணுகின்றாள். இத்தகைய உறுதி யுடையவளாக இருக்கின்றாள் அவள்."

இதுவே மேலேகண்ட அடிகளின் பொருள். தன் மகள், கணவனுடன் ஒன்றுபட்டு இல்லறம் நடத்துவதைக் கண்ட அன்னை ஒருத்தி இவ்வாறு கூறினாள்.

பழந்தமிழ்ப் பெண்கள் கணவன் கருத்துப்படி வாழ்க்கை நடத்தி வந்தனர் என்பதற்கு இதுவும் ஒரு சான்று. இதுவே ஒரு குடும்பப் பெண்ணின் உயர்ந்த பண்பு ஆகும்.

இதனை

"ஒல்குபசி உழந்த ஒடுங்குநுண் மருங்குல்
வளைக்கைக் கிணைமகள் வள்உகிர்க் குறைத்த
குப்பை வேளை உப்புஇலி வெந்ததை
மடவோர் காட்சி நாணிக் கடையடைத்து
இரும்பேர் ஒக்கலொடு ஒருங்குடன் மிசையும்."

(சிறுபாண் ஆற்றுப்படை 135—139)

என்ற பத்துப்பாட்டாலும் அறியலாம்.

"பசியால் வருந்துகின்றவள்; மெல்லிய இடையை உடையவள்; வளை அணிந்தவள்! கிணை வாசிப்போன் கிழத்தி. சமைப்பதற்கான பண்டம் ஒன்றும் இல்லை. குப்பைக் கீரையைக் கூர்மையான நகத்தி னால் கிள்ளினாள். அதற்குப்போட உப்புக்கூட இல்லை. வேக வைத்தாள். அறியாதவர்கள், அந்த உணவைப் பார்த்தால் நகைப் பார்களே என்று நாணம் அடைந்தாள். ஆதலால் வாசற் கதவைச் சாத்தித் தாழ்ப்பாள் போட்டாள். தனது நிறைந்த சுற்றத்துடன் உள்ளே உட்கார்ந்து, அவர்களுடன் தானும் உண்டாள்." இதுவே மேலே காட்டிய அடிகளின் பொருள்.

மேலே காட்டியவைகளால், உள்ளதை வைத்துக்கொண்டு உவப்புடன் குடும்பம் நடத்தும் வழக்கம் பண்டைப் பெண்களிடம் இருந்தது என்பதைக் காணலாம்.

விருந்தும் மகளிரும்

வந்த விருந்தினரை முகங்கோணமல் வரவேற்று உதவிசெய்யும் பண்பு பெண்களின் இயற்கையாகும். ஆண்கள் எவ்வளவுதான் விருந்தினரை வரவேற்கும் தன்மையுள்ளவராயிருந்தாலும் பெண்களிடம் அக்குணம் இல்லாவிட்டால் பயன் இல்லை. பண்டைத் தமிழ்ப் பெண்கள் இக்குணம் படைத்தவராயிருந்தனர்.

" அமிழ்துசுட்டு ஆனுக் கமழ்குய் அடிசில்
வருநர்க்கு வரையா வசைஇல் வாழ்க்கை
மகளிர் ... ...

" அமிழ்தத்தைத் தன் சுவையால் வென்றது; உண்ண உண்ணத் தெவிட்டாத மணம் கமழும் உணவு; நல்ல தாளிப்பையுடையது. இத்தகைய உணவை வந்த விருந்தினர்க்குக் குறையில்லாமல் வழங்குவர்; குற்றமற்ற இல்வாழ்க்கையை யுடைய மகளிர் செயல் இதுவாகும் " (புறநானூறு 10)

" அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும்
முல்லை சான்ற கற்பின் மெல்இயல் குறுமகள்

இரவு நேரமானுலும், வந்த விருந்தினரைக் கண்டு மகிழ்ச்சியடையும் முல்லை ஒழுக்கம் நிறைந்த கற்பினையுடைய இளம்பெண் "

(நற்றிணை 142)

மேலே காட்டிய புறநானூற்று அடிகளும், நற்றிணை அடிகளும் பெண்களின் இயல்பை எடுத்துக்காட்டுகின்றன. விருந்தோம்பும் தன்மை தமிழ்ப் பெண்களின் பிறவிக் குணம் என்பதை உணர்த்தின.

" காதலனுடன் ஊடியிருக்கும் மனைவி, விருந்தினர் வந்தால், ஊடலை விட்டுவிடுவாள்; விருந்தினரைப் போற்றுவதிலே—அவர்களுக்கு வேண்டிய உணவுப் பண்டங்களை ஆக்குவதிலே—பொழுது போக்குவாள். ஊடியிருந்த அவளுடைய முகத்திலே மகிழ்ச்சி தவழும் " என்ற செய்தியை நற்றிணையின் பாடல் 120ல் காணலாம்.

நற்றிணையின் பாடல் 280-இல் காணும் செய்தி குறிப்பிடத் தக்கது. காதலன் பரத்தையர் நட்பை நாடித் திரிந்துவிட்டு, மனைக்கு வருகின்ருன். அவன் செயலைக் கண்டிப்பதற்கு மனைவிக்கு நேரமேயில்லை; அவன் செய்கைக்காக அவனுடன் ஊடல் கொள்ளுவதற்கு வாய்ப்பே கிடைக்கவில்லை. காரணம்: ஓயாமல் விருந்தினர் வந்துகொண்டேயிருக்கின்றனர்; அவர்களை வரவேற்று உபசரிப்பதிலேயே அவளுடைய நேரம் போய்க்கொண்டிருக்கின்றது. இவ்வாறு கூறுகிறது அச்செய்யுள்.

"நன் மனை நனிவிருந்து அயரும்
கை தூ வின்மையின், எய்தாம் ஆறே.

எங்கள் நல்ல வீட்டிலே மிகுதியான விருந்தினர்கள் தங்கியிருக்கின்றனர். ஆதலால் எனக்கு ஓய்வே இல்லை. நான் ஊடுவதற்கு வழியே இல்லை." என்பது அச்செய்யுளின் அடிகள்.

இதுவும் விருந்தினரைப் போற்றுவதிற் பெண்களுக்குள்ள ஊக்கத்தை உணர்த்துகின்றது.

மேலே காட்டிய புறநானூற்றுச் செய்யுளும், நற்றிணைச் செய்யுட்களும் விருந்தினரைப் பேணும் வசதிபடைத்த பெண்களின் இயல்பை எடுத்துரைத்தன.

"தமிழ்ப் பெண் எவ்வளவு விருந்தினர் வந்தாலும் மனங்கோண மாட்டாள். பண்டங்கள் குறைவாயிருந்தாலும் கவலைப்படமாட்டாள். வந்த விருந்தினர் அவ்வளவு பேரையும் பந்தலிலே வரிசையாக உட்காரவைத்து உணவிட்டு உபசரிப்பாள்.

"தவச் சிறிது ஆயினும் மிகப்பலர் என்னுள்
நீள் நெடும் பந்தர் ஊண்முறை ஊட்டும்
இற்பொலி மகடூஉ"

(புறநானூறு 331)

என்பது புறநானூறு.

பெண்களின் விருந்தோம்பும் சிறப்பைப் பற்றிக் கம்பன் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

"கல்வியும் செல்வமும் பெற்ற பெண்கள் வாழும் மனையிலே வறியவர்கள் பொருள் பெற்றுச் செல்கின்றனர்; எப்பொழுதும் விருந்தினர் கூடியிருந்து உண்ணுகின்றனர்; இவ்விரண்டைத் தவிர அவ்வீடுகளில் வேறு சிறந்த செயல்கள் எதுவும் நடக்கவில்லை." என்பது கம்பன் மொழி.

"பெருந் தடம்கண் பிறைநுதலார்க் கெல்லாம்
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க்கு ஈதலும், வைகலும்
விருந்தும் அன்றி விளைவன யாவையே."

என்ற பாடலால் இவ்வுண்மையைக் காணலாம்.

பண்டைத் தமிழகத்தில், செல்வர் வீட்டுப் பெண்களிடமும் விருந்தோம்பும் குணம் உண்டு; வறியவர் வீட்டுப் பெண்களிடமும் இத்தன்மையுண்டு; உயர்ந்த குடிப் பெண்களிடமும், தாழ்ந்த குடிப் பெண்களிடமும் விருந்தோம்பும் தன்மையுண்டு,

“ கானவன் எய்த முளவுமான் கொழும்குறை
தேம்கமழ் கதுப்பின் கொடிச்சி, மகிழ்ந்துகொடு
காந்தள் அம்சிறு குடிப்பகுக்கும்

மலைச்சாரலில் கானவனால் அம்புஎய்து வீழ்த்தப்பட்ட முள்ளம்பன்றியின் கொழுத்த இறைச்சியை, அவன் மனைவி - தேன்மணம் வீசும் கூந்தலையுடைய கொடிச்சி - மகிழ்ச்சியுடன் எடுத்துக்கொண்டு வருவாள். அந்த இறைச்சியை காந்தள் செடிகள் அழகாகப் பூத்திருக்கின்ற சிற்றூரிலே உள்ள பலர்க்கும் பகுத்துக்கொடுப்பாள் ”

(நற்றிணை 85)

இது நற்றிணையில் காணப்படும் செய்தி. இதனால் நாகரிகம் பெறாத கீழ்க் குலத்துப் பெண்களிடமும் பிறருக்குப் பகுத்துக் கொடுத்து உண்ணும் குணம் இருந்தது; விருந்தோம்பும் தன்மையிருந்தது; என்பதை அறியலாம்.

பழங்காலப் பண்பு

இந்தக் காலத்துப் பெண்கள் வீட்டிலிருக்கும்போது அவ்வளவாகத் தங்களை அலங்கரித்துககொள்ளுவதில்லை. வெளியில் செல்லும்போதுதான் தங்களை அணிசெய்துகொள்ளுகின்றனர். ஆடம்பரமான ஆடைகள்; மினுமினுக்கும் நகைகள்; மற்றும் பல பொருள்கள் கொண்டு கோலம்பூண்டு செல்கின்றனர். தங்கள் அலங்கரிப்பைப் பிறர் பார்க்கவேண்டும் என்பதற்காகவே ஊர்வலம் வரும் பெண்கள் உண்டு.

பண்டைக் காலத்துப் பெண்கள் கணவன்முன்னேதான் அழகுடன் காட்சியளிப்பர். கணவன் இல்லாதபோது தங்களைப் புனைந்து கொள்ளமாட்டார்கள். இதுவே பழந்தமிழ்ப் பெண்களின் பண்பு.

கோவலனைப் பிரிந்திருக்கும் கண்ணகியின் நிலையைச் சிலப்பதிகாரம் கூறுகிறது.

“ அம்செம் சீறடி அணிசிலம்பு ஒழிய
மென்துகில் அல்குல் மேகலை நீங்கக்
கொங்கை முன்றில் குங்குமம் எழுதாள்;
மங்கல அணியின் பிறிதுஅணி மகிழாள்,
கொடும்குழை துறந்து வடிந்துவீழ் காதினள்,
திங்கள் வான்முகம் சிறுவியர்பு இரியச்
செம்கயல் நெடும்கண் அஞ்சனம் மறப்பப்
பவள வாள்நுதல் திலகம் இழப்பத்
தவள வாள்நகை கோவலன் இழப்ப
மைஇரும் கூந்தல் நெய்அணி மறப்பக்
கையறு நெஞ்சத்துக் கண்ணகி ”

என்பது சிலப்பதிகாரம் அந்திமாலைச் சிறப்புச்செய் காதையில் காணப்படுவது.

"கணவனைப் பிரிந்த கண்ணகி கால்களிலே சிலம்பணியவில்லை; ஆடைக்குமேல் அணியும் மேகலாபரணத்தையும் அணிந்திலள்; கொங்கையிலே குங்குமம் பூசாள்; தாலியைத் தவிர வேறு அணிகளை யெல்லாம் துறந்தாள். காதணியை நீத்தாள். முகத்திலே சிறு வியர்வைத் துளிகளுடன் இருந்தாள்; கண்ணுக்கு மை தீட்டாள்; நெற்றியிலே பொட்டும் வைத்திலள்; சிரித்தும் அறியாள்; தலைமயிருக்குத் தைலம் இட்டுச் சீவமாட்டாள். இக்கோலத்துடன் உள்ளத்திலே துயர்கொண்டு உறைந்தாள்" என்பதுதான் மேலேகாட்டிய அடிகளின் கருத்து.

காதலன் பொருள் ஈட்டுவதற்கோ, வேறு அலுவல் காரணமாகவோ காதலியைவிட்டுப் பிரிந்து செல்வான்; அவன்பிரிவால் வருந்தியிருக்கும் பெண்களின் நிலையை அகப்பொருள் நூல்களிலே காண்கின்றோம். பிரிந்த காதலன், திரும்பும் வரையிலும், அவர்கள் உண்பதில்லை; உறங்குவதில்லை; நீராடுவதில்லை; உடுத்தும், பூண்டும் தங்களை அலங்கரித்துக்கொள்வதில்லை; என்று கூறப்படுகின்றது.

இவைகள் பழந்தமிழ்ப் பெண்களின் பண்பை எடுத்துக்காட்டுகின்றன.

குடிப்பெருமை போற்றும் பெண்கள்

பழந்தமிழ்ப் பெண்கள், தங்கள் குடிப்பெருமையைக் காப்பதிலே கண்ணும் கருத்துமாக இருந்தனர். அவர்கள் குடும்பத்தின் பரம்பரைப் பண்பாடு அவர்களிடம் குடிகொண்டிருந்தது. இதற்கு மறக்குடி மகளிர் பண்பைப் பற்றிக்கூறும் பழம்பாடல்களே போதிய சான்றாகும்.

வீரர் குடியிலே பிறந்த பெண்கள், தங்கள் பிள்ளைகளைப் போர்க்களத்துக்குத் துணிவுடன் அனுப்புவார்கள். அவர்கள் புறங்காட்டாமல் போர் புரியவேண்டும் என்றே விரும்புவார்கள். மார்பில் காயம் பட்டுப் போரிலே மடியும் மக்களைத்தான் அவர்கள் பாராட்டுவார்கள். தம் மக்கள் புறங்காட்டி ஓடிவந்தனர் என்று கேட்டால் அவர்கள் அவமானம் அடைவார்கள்; அத்தகைய கோழை மக்களைப் பெற்றதற்காக வருந்துவார்கள். இச்செய்திகளைப் புறநானூற்றிலே காணலாம்.

"சிற்றில் நற்றூண் பற்றி நின்மகன்
யாண்டு உளனோ என்று வினவுதி; என்மகன்
யாண்டுள்ன் ஆயினும் அறியேன்; ஓரும்
புலிசேர்ந்து போகிய கல்அளை போல
ஈன்ற வயிறோ இதுவே;
தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே.

சிறிய வீட்டில் உள்ள கல்தூணைப் பிடித்துக்கொண்டு நின்று, உன் மகன் எங்கேயிருக்கின்றான் என்று கேட்கின்றாய்; என்மகன் எங்குள்ளான் என்பதை அறியேன். புலி கிடந்துபோன மலைக்குகை போன்ற வயிறு இது. ஆதலால் அவன் போர்க்களத்திலேதான் காணப்படுவான, அங்கே போய் அவனைப்பார்."

(புறம் 86)

இப்பாடல் மறக்குடிப் பெண் ஒருத்தி கூறியது. தன் மகனைப் புலியாகவும், அவனைப் பெற்றெடுத்த தன் வயிற்றைப் புலியுறைந்த குகையாகவும் பெருமையுடன் கூறிக்கொள்ளுகின்றாள். இதனால் மறக்குடிப் பெண்களின் மனப்பான்மையைக் காணலாம்.

"பிள்ளையைப் பெற்றுவளர்த்தல் எனது கடமை; அவனை அறிவுள்ளவனாகச் செய்தல் தந்தையின் கடமை; அவனுக்குப் படை செய்துகொடுத்தல் கொல்லன் கடமை; நல்லொழுக்கம் கற்பித்தல் அரசன் கடமை; போர் செய்து எதிரிகளின் படையை முறியடித்து நாட்டைக் காத்தல் மகன் கடமை"

என்பது புறநானூற்றின் 312-வது பாட்டு. பொன்முடியார் என்னும் மறக்குடி மகள் பாடியது.

"உன் மகன் போர்க்களத்திலே புறமிட்டு ஓடினான் என்று சிலர் வந்து கூறினர். உடனே அவள் வாளைக் கையில் எடுத்துக் கொண்டாள், 'என் மகன் புறமிட்டு ஓடியிருப்பானாயின், அவன் பாலுண்ட எனது மார்பை அறுத்தெறிவேன்' என்று சூள் உரைத்தாள்; போர்க்களம் புகுந்தாள்; அங்கே கிடந்த பிணங்களையெல்லாம் புரட்டிப் பார்த்தாள். தன் மகன் வாளால் சிதைந்து கிடப்பதுகண்டு அவனை யீன்ற காலத்தினும் பெரிதும் மகிழ்ந்தாள்".

என்பது புறநானூற்றின் 278-வது பாட்டு.

"முதல் நாள் நடந்த போரிலே அவள் தந்தை வீரத்துடன் போர்புரிந்து மாண்டான்; நேற்றைய போரில் அவள் கணவன் போர்புரிந்து மாண்டான். இன்று போர்முரசு கேட்டதும், அவளுடைய ஒரே மகனைப் போர்க்கோலம் புனைந்து சண்டைக்கு அனுப்பினாள். மறக்குடியில் பிறந்த அவள் இயல்பு சிறந்தது"

என்பது புறநானூற்றின் 279-வது பாடல்.

மேலே காட்டிய புறநானூற்றுப் பாடல்கள், பெண்கள் தம்முடைய குடிப் பெருமையைக் காப்பாற்றுவதில் முன்னின்றார்கள், குல ஒழுக்கத்தைப் போற்றிவந்தார்கள் என்பதை விளக்கும்.

அன்றும் இன்றும்

மேலே கூறியவைகளைக்கொண்டு பழங்காலப் பெண்களின் பண்பாட்டை ஓரளவு உணர்ந்துகொள்ளலாம்.

ஒரு குடும்பம் வாழ்வதும், தாழ்வதும் பெண்ணுல்தான் என்று அக்கால மக்கள் நம்பிவந்தனர்; அந்த நம்பிக்கை இன்றும் உண்டு.

பெண்கள், தாங்கள் புகுந்த வீட்டின் இயல்புக்கேற்ப நடந்து கொள்ளுவார்கள் பிறந்த வீட்டைப் பற்றி எண்ணமாட்டார்கள். வறுமையால் வாடும்போதும், பிறந்த வீட்டின் உதவியை எதிர் பார்க்கமாட்டார்கள்; உதவி கிடைத்தாலும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

வறுமையால் எவ்வளவு வாடினுலும், அதை வெளியிலே காட்டிக் கொள்ளமாட்டார்கள். உள்ளதைக்கொண்டு மகிழ்ந்து வாழ்வார்கள்.

தாம் சமைத்த உணவைத் தாமே தம் கணவர்க்கு இடுவார்கள். அவர்கள் அவ்வுணவைச் சுவைத்து உண்பதைக்கண்டு உள்ளம் மகிழ்வார்கள்; முகம் மலர்வார்கள்.

செல்வம் நிறைந்த வீட்டுப் பெண்களாயினும் சரி, வறியவர் வீட்டுப் பெண்களாயினும் சரி, விருந்து செய்வதிலே அவர்களுக்கு ஆவல் மிகுதி; எந்த நேரத்தில் விருந்தினர் வந்தாலும், எவ்வளவு விருந்தினர்கள் வந்தாலும் அலுப்புச் சலிப்பின்றி உபசரிப்பார்கள்.

காதலனும், காதலியும் ஊடியிருக்கும்போது விருந்தினர் வந் தால் அவர்கள் ஊடல் ஓடிப்போகும். விருந்தினர் எப்பொழுதும் இருக்கும் குடும்பத்திலே கணவன் மனைவிகளுக்குள் சண்டை சச்சரவே தோன்ருது.

பழங்காலப் பெண்கள் கணவன் இருக்கும்போதுதான் தங்களை அலங்கரித்துக்கொள்ளுவார்கள்; கணவனுடன் செல்லும்போதுதான் நல்லுடையும், நல்லணியும் பூண்பார்கள்.

பெண்கள் தங்கள் குலப்பெருமையைக் காப்பாற்றுவதிலே தலை சிறந்தவர்கள்; வீரர்குடி – மறவர்குடிப் பெண்களின் தன்மையைக் கூறும் பாடல்கள் இவ்வுண்மையை எடுத்துக்காட்டுகின்றன.

பழந்தமிழ்ப் பெண்களிடம் இப்பண்புகள் குடிகொண்டிருந்தன. இவைகளே இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ள செய்திகள்.

இன்று நமது நாட்டுப் பெண்களிடம் நடையுடைகளில் எவ் வளவோ மாறுதல்களைக் காண்கின்ருேம். ஆயினும், பழந்தமிழ்ப் பண்பாடு நமது நாட்டுப் பெண்களைவிட்டு ஓடிப்போய்விடவில்லை. ஒரு சிலர் பழமையைப் பற்றி எள்ளிநகையாடலாம். புதுமையைப் பற்றியே புகழ்ந்து பேசலாம். ஆயினும் பழம்பண்புகளை அவர்களால் அழித்து விடமுடியவில்லை. பரம்பரைப் பண்பை அவ்வளவு எளிதிலே மாற்றி விடமுடியாது. தோற்றத்திலே புதிய நாகரிகப் போர்வை மூடியிருக் கலாம். பழங்குடிப் பண்பு உள்ளே முடங்கித்தான் கிடக்கும். இந்த உண்மை இந்த நாட்டில் மட்டும் அன்று; எந்நாட்டிலும் காணலாம்.

ஒரு தொடர்புரை.

[மயிலை சீனி. வேங்கடசாமி]

[தமிழ்ப் பொழில் துணர் 35, மலர் 3-ல், "மணிமேகலையில் முரண்பட்ட செய்தியா?" என்னும் தலைப்பில் எழுதிய கட்டுரையில் ஒன்று விடுபட்டுப்போயிற்று. அதனை இங்கு எழுதுகிறேன். இதை அக்கட்டுரையுடன் சேர்த்து வாசித்துக்கொள்க.]

இனி வரப்போகிற புத்தரிடம் கோவலனும் கண்ணகியும் உபதேசம் கேட்டு வீடு பேறடையப் போகிறார்கள் என்று சாத்தனார் மணிமேகலையில் கூறியதை எடுத்துக் காட்டினேன். அக்கட்டுரையில் மேற்கோள் காட்டப்பட்ட மணிமேகலைச் செய்யுளில்,

"காதலி தன்னொடு கபிலையம் பதியில்
நாதன் நல்லறம் கேட்டுவீ டெய்தும்"

என்றும்,

"கரவரும் பெருமைக் கபிலையம் பதியில்
... ...
அன்புறு மனத்தோடு அவனறங் கேட்டுத்
துறவி யுள்ளந் தோன்றித் தொடரும்
பிறவி நீத்த பெற்றியம் ஆகுவம்"

என்றும் கூறப்பட்டுள்ளது. இங்கு, படிப்போர்க்கு ஓர் ஐயம் தோன்றக்கூடும். எதிர்காலப் புத்தரைக் கூறுவதாக இருந்தால் கபிலவாஸ்து நகரத்தை ஏன் குறிப்பிடவேண்டும்? கபிலவாஸ்து சென்றுபோன கௌதமபுத்தர் பிறந்த இடமாயிற்றே; இதை ஏன் எதிர்காலப் புத்தருடன் தொடர்புபடுத்தவேண்டும்; என்னும் ஐயம் தோன்றலாம்.

இனி வரப்போகிற புத்தர் எந்த ஊரில் பிறக்கப்போகிறார் என்பது தெரியாது. புதிதாகத் தோன்றும் புத்தர்கள், தங்களுக்கு முன்பு இருந்து மறைந்துபோன புத்தர்கள் பிறந்த இடத்தையும் நிர்வாண மோட்சம் அடைந்த இடத்தையும் புண்ணிய திருப்பதியாகப் போற்றுவது மரபு. இந்த மரபுப்படி, இனி வரப்போகிற புத்தர், சென்றுபோன கௌதம புத்தர் பிறந்த இடமாகிய கபிலவாஸ்து நகரத்தைப் போற்றி அங்குத் தமது உபதேசத்தைச் செய்வார். இதைத்தான் சாத்தனார் மேற்காட்டிய செய்யுட்பகுதியில் கூறினார். எனவே, கோவலனும் கண்ணகியும் இனி வரப்போகிற புத்தரிடம் கபிலவாஸ்து நகரத்திலே நல்லறங்கேட்டு வீடு பெறுவார்கள் என்பது சாத்தனாரின் கருத்து. சென்றுபோன கௌதம புத்தரிடம் நல்லறங் கேட்பவர்கள் என்பது பொருள் அன்று.